






# தமிழரசு

1.2.1994 ரூ.3


பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR No.678/DIS/93/247
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...


மாநிலத் திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை ... 2

பெரியார் மாவட்டத்தில் அறிவொளி இயக்கம் ... 18

வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் வெண்மைப் புரட்சி ... 19

1993-94-ஆம் ஆண்டிற்கான கலைமாமணி விருது ... 21

தமிழகத்தின் 12-வது அருங்காட்சியகம் ... 23

நெசவாளர் நலன்காக்கும் கோ-ஆப்டெக்ஸ் ... 24

நீலகிரி மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி ... 30

தமிழக முதல்வரின் மனிதாபிமானத் திட்டங்களை அன்னை தெரசா நேரில் வாழ்த்தினார் ... 33

வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை முதலில் சோதனை முறையில் அமல்படுத்தப்பட வேண்டும் — மாண்புமிகு முதல்வர் ... 35

அனைத்து அரசுப் பள்ளிகளிலும் அறிவியல் வளாகம் - அறிவியல் கண்காட்சியில் முதல்வர் ... 37

தொகுதி மக்களுக்கு முதல்வர் பேருதவி ... 41

திருக்கோயில் சுற்றுலா ரயில் - முதல்வர் ஆணை ... 43

திருவள்ளுவர் திருநாள் ... 45

டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகம் ... 47



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2025

தைத் திங்கள் - 19

மலர்:24 இதழ்:15

1-2-1994

விலை: ரூபாய் மூன்று


★ மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள், திருப்பதி செல்லும் வழியில் 20.1.94 அன்று தம் துணைவியாருடன் சென்னைக்கு வருகை தந்தார். அவர்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னை விமான நிலையத்தில் அன்புடன் வரவேற்றார்.



# தமிழகத் திரைப்படத் துறையின் பெருமையினை, அகில உலகே வியந்து பாராட்டும் வண்ணம் பணியாற்றிடுவீர்!



## தமிழக அரசின் மாநிலத் 'திரைப்பட விருதுகள்' வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை

**வ**ண்ணமிகு இந்த விழாவில் கலந்துகொண்டு, தமிழ்த் திரை உலகத்தின் நட்சத்திரங்களுக்கும், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், 1992-ஆம் ஆண்டிற்கான, தமிழக அரசின் திரைப்பட விருதுகளை வழங்கி, மகிழ்கின்ற வாய்ப்பினைப் பெற்றதை எண்ணிப் பெருமிதமும், பேருவகையும் அடைகின்றேன்.

அனுதினமும் வாழ்க்கையில், பல்வேறு பிரச்சினைகளைச் சமாளித்து வரும் மனிதர்களுக்கு, மகிழ்ச்சியையும், களிப்பையும் அளிக்கக் கூடியவர்கள், திரைப்படத் துறையினர். சோர்ந்த மனங்களுக்கு மகிழ்ச்சியையும், கண்களுக்குக் களிப்பையும் வழங்குகின்ற கலைத் துறையினர் அனைவரையும், ஒரு சேர இங்கே காண்பதில், பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

### அமுதசுரபி

திரைப்படத் துறை என்பது, பல்வேறு கலைகளைப் பரிவுடன் வளர்க்கும் ஒரு தாய். ஒரு புறம் ஆயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பையும் மற்றொரு புறம் இலட்சக் கணக்கான மக்களுக்கு மகிழ்ச்சியையும், ஒரே நேரத்தில் வழங்கிடும் ஓர் அமுத சுரபி தான், திரைப்படத் துறை.

வளர்ந்து வரும் நமது சமுதாயத்தில் திரைப்படத்தின் தாக்கமும், மாறி வரும் திரைப்படத் துறையில் அறிவியலின் தாக்கமும், நாம் தெளிவாகக் காண முடிகிறது. கனமான இதயத்தை, கனிவாகத் தொடுவதால், இது ஒரு கலை. அறியாத பல விவரங்களை நமக்கு வழங்கி அறிவை வளர்ப்பதால், இது அறிவியல்.

திரைப்படத் துறை என்ற கலை, இன்றைய அறிவியல் வளர்ச்சியால், வளர்ந்து வந்தாலும், அந்த அறிவியலுக்கும் அழகைச் சேர்த்து வைக்கும் ஆற்றலையும் பெற்றிருக்கிறது. திரைப் படத் துறையின் பரிணாம வளர்ச்சியின் பரிமாணங்கள், தொழில்நுட்ப வளர்ச்சியால், புதிய எல்லைகளை நெருங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை, நாம் கண் கூடாகக் காண்கிறோம். கலையும், அறிவியலும் சேர்ந்த இந்தத் திரைப்படத் தொழில், ஒரு மாபெரும் கனவுத் தொழிற்சாலை என்று, பல அறிஞர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மாறி வரும் உலகச் சூழ்நிலையில், திரைப்படத் துறையின் தாக்கம், எல்லா இடங்களிலும் காண முடிகின்றது.



### முன்னணியில் தமிழகம்!

தமிழகத்தைப் பொறுத்தவரை, வெள்ளித் திரை முன்னணியில்

# காவலரைக் கொடியவர்களாகச் சித்திரிப்பதைக் கைவிடுங்கள்!

**— மாண்புமிகு முதல்வர் வேண்டுகோள்**

தமிழகத் திரைப்பட உலகில் சமீப காலமாகத் தென்படுகின்ற, விரும்பத் தகாத ஒரு அம்சத்தை இந்த நேரத்தில் எடுத்துரைப்பது, எனது கடமை என்று கருதுகிறேன். காவல் துறையைச் சார்ந்த காவலர்களையும், அலுவலர்களையும், சமூக விரோதிகளாகவும், கேலிக்கு உரியவர்களாகவும், பொதுமக்களுக்கு நன்மை செய்யாமல், தீமை செய்யும் துரோகிகளாகவும், கோழைகளாகவும், தமிழ்த் திரைப்படங்களில் சித்திரிக்கப்பட்டு வருவதைக் கண்டு நான் மனவேதனை அடைந்துள்ளேன்.

சமுதாய நலனுக்காகக் காவல் துறையினர் ஆற்றி வரும் பணி மிகமிகக் கடினமானது. காவல் துறையினர் ஆற்றும் பணியை ஒரு தியாகம் என்றே கூறலாம். மற்ற துறைகளில் பணிபுரிகின்றவர்களுக்கு விடுமுறை உண்டு; விழாக் காலங்களில் வீட்டிற்குச் சென்று, பண்டிகைகளைக் கொண்டாடுவதற்கு வாய்ப்புகளும் உண்டு. ஆனால், காவல் துறையில் பணிபுரிபவர்களின் நிலைமை அவ்வாறு இல்லை. அவர்கள் வாரத்தில் 7 நாட்களும், மாதத்தில் 30 நாட்களும், வருடத்தில் 365 நாட்களும், ஓய்வு இன்றித் தொடர்ந்து, மக்கள் நலனுக்காகப் பணியாற்றி வருகிறார்கள். காவல் துறையினர் சட்டம் ஒழுங்கை நன்கு பராமரித்து, பொது அமைதியை ஏற்படுத்தினால் தான், திரைப்படத் தொழில் உட்பட, அனைத்துத் தொழில்களும் நாட்டில் சிறப்பான முறையில் செயல்பட முடியும் என்பது, அனைவரும் அறிந்த உண்மை.

மக்கள் அனைவரும் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும், தங்களது கடமைகளை ஆற்றவும், நல்ல முறையில் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கும், காவல் துறையைச் சேர்ந்த காவலர்களின் பணி, எவ்வளவு அவசியம் என்ற உண்மையைத் திரைப்படங்களில் எடுத்துக் காட்டுவது தான், மக்கள் நலனுக்காக ஓய்வின்றிச் செயலாற்றும் காவலர்களுக்குத் திரைப்படத் துறையினர் காட்டும் நன்றிக்கடன் என்று நான் கருதுகிறேன். திரைப்படங்களில் காவல் துறையினரைச் சரியான முறையில், மக்கள் மத்தியில் சித்திரித்துக் காட்டத் தவறினால், காவல் துறையில் பணிபுரியும் காவலர்கள், அலுவலர்கள், ஆகியோருக்கு மனச் சோர்வும், மனவேதனையும் ஏற்பட்டு விடும். அதன் விளைவாகக் காவலர்கள் மக்களுக்கு ஆற்றும் சேவையில், தொய்வு ஏற்படக் கூடிய அபாயமும் உண்டு. எனவே, சட்டம்-ஒழுங்கைப் பராமரித்து, பொதுமக்களுக்குப் பாதுகாப்பு வழங்கி, தங்களுக்கு ஏற்படும் இன்னல்களையும், இடையூறுகளையும், பொருட்படுத்தாமல், கடமையாற்றி வரும் காவல் துறையினரை ஊக்கப்படுத்தி, அவர்கள் பணியைச் செவ்வனே ஆற்றிடத் திரைப்பட உலகம் தூண்டுகோலாக விளங்க வேண்டும்.

காவல் துறையில் உள்ளவர்கள், மற்ற துறையினரைப் போல் அல்லாமல், அபாயங்களும், ஆபத்துக்களும் நிறைந்த சூழ்நிலையில் பணிபுரிந்து வருகின்றனர். அத்தகையவர்களைப் பாராட்டி, ஊக்கப்படுத்துவது தான், கலையுலகம் அவர்களுக்குச் செலுத்தும் நன்றி. எனவே, காவலர்களைக் கொடியவர்களாகச் சித்திரிக்கின்ற மனப்பாங்கை, தமிழ்த் திரைப்பட உலகம் இன்று முதல் அறவே கைவிட வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

— மாநிலத் திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரையிலிருந்து...

இருக்கின்றது; முதலிடம் வகிக்கின்றது. உலக அளவில், அதிக திரைப்படங்களை உருவாக்கித் தரும் நாடுகளில் ஒன்றாக இந்தியாவும், இந்தியாவிலேயே அதிகத் திரைப்படம் தயாரிக்கும் நகரமாக நமது சென்னையும், விளங்குகின்றன. நமது வாழ்க்கையின் ஓர் அங்கமாக மாறிவிட்ட இத்திரைப்படத் துறை, பல சமுதாயச் சீர்திருத்தங்களுக்கு வழிவகுத்து இருக்கின்றது என்பதை, திரைப்படங்களை விரும்பிக் காணாதவர்கள் கூட, ஒப்புக் கொண்ட ஓர் உண்மை ஆகும்.

சென்ற ஆண்டு நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் நான் பேசிய போது, திரைப்படத் துறை என்பதை விட, 'திரை உலகம்' என்று குறிப்பிடுவதே பொருத்தமாக இருக்கும் என்று கூறினேன். 'திரை உலகம்' என்று கூறும்போது, அது மனித வாழ்க்கையை அழகுணர்வோடு பிரதிபலிக்கும் கலையாக, மக்களுடைய வாழ்க்கையின் பல்வேறு நிலைகளையும், உணர்வுகளையும் வெளிப்படுத்தி, அதன் மூலம் ஒரு புதிய உலகத்தையே திரைப்படக் கலைஞர்கள் படைப்பதால், 'திரை உலகம்' என்ற பெயரே திரைப்படத் துறைக்குப் பொருத்தமாக இருக்கும் என்று கூறினேன். ஆனால், திரை உலகமானது, கலையும், தொழில் நுட்பமும் சங்கமிக்கின்ற, மகத்தான மக்கட் பொதுமுபோக்குச் சாதனமாக, பார்ப்போர்க்கு உற்சாகத்தினையும், படைப்போருக்கு வாழ்வினையும் கொடுக்கின்ற, ஓர் ஆரோக்கியமான தொழிலாக விளங்கி வருவதால், திரை உலகினைத் 'திரைப்படத் தொழில்' என்று கூறுவதும், மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

## திரைப்படத் துறை முன்னேற...

தமிழ்த் திரைப்படத் துறையின் முன்னேற்றத்திற்காகவும், அதன் ஆரோக்கியமான வளர்ச்சிக்காகவும், கடந்த 2½ ஆண்டுகளுக்கு மேலாக, உங்கள் சகோதரியின் அரசு, பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கை

களை எடுத்து வருவதை, நீங்கள் நன்கு அறிவீர்கள்.

குறைந்த செலவில் தயாரிக்கப் படும், தரமான திரைப்படங்களுக் கான மானியம், 2 இலட்சம் ரூபாயி லிருந்து, 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு உள்ளது. அத்தகைய மானியம் பெறும் படங்களின் எண் ணிக்கையும், 50-லிருந்து 75-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த மானி யம் பெறத் தகுதியுள்ள படங்களுக் கான பிரதிகளின் எண்ணிக்கை, 12-லிருந்து, 6-ஆகக் குறைக்கப் பட்டுள்ளது.

திரை உலகைச் சார்ந்தவர்களின் குழந்தைகளுக்காக, தமிழ்நாடு திரைப் படக் கல்லூரியின் ஒவ்வொரு பிரி விலும், இட ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் கட்டணச் சலுகைகளும் அளிக்கப்பட்டுள்ளன.

அரசுக்குச் சொந்தமான பல்வேறு இடங்களில், வெளிப்புறப் படப் பிடிப்புகளை நடத்த, அரசின் அனு மதியை ஓரிடத்திலே பெறுவதற் கான, Single Window System நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது. இச் சலுகைகள், உங்கள் அனைவருடைய வரவேற்பினையும் பெற்றுள்ளதை, நான் நன்கு அறிவேன்.

இது மட்டுமின்றி, தமிழ்த் திரைப் படத் தொழில் தொடர்பான பிரச் சினைகளைத் தீர்க்க, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குழுவும், மாநில அளவில் உயர்மட்டக் குழு வும் அமைக்கப்பட்டுள்ளன.

சிறந்த தமிழ்த் திரைப்படங் களுக்கு வழங்கப்பட்டு வரும் பரிசுத் தொகைகள், இந்த ஆண்டு முதல் 25,000 ரூபாய் அதிகரிக்கப்பட்டு உள்ளது. அதன்படி, சிறந்த திரைப்படத்திற்கான முதல் பரிசு ஒரு இலட்சத்து 25,000 ரூபாயாக வும், இரண்டாவது பரிசு 75,000 ரூபாயாகவும், மூன்றாவது பரிசு 50,000 ரூபாயாகவும், சிறப்புப் பரிசு 50,000 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

### திரைப்பட நகரம்

குழந்தைகளுக்கான திரைப்படங் களுக்கு, ஆண்டு ஒன்றுக்கு, 12 இலட்சம் ரூபாய் வரை, வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இவை அனைத்திற்கும் மேலாக, நான் சென்ற ஆண்டு, இங்கே ஆற்றிய உரையில் குறிப்பிட்டவாறு, உலகத் திரைப்படத் துறையினர், அனைவரும் வியந்து போற்றும் வண்ணம், அனைத்து நவீன வசதிகள் கொண்ட 'திரைப்பட நகர்' Film City சென்னையில் வெகு வேக மாக உருவாகி வருகின்றது. இந்த ஆண்டு, வெகு விரைவில் தொடங் கப்படவுள்ள இந்தத் திரைப்பட நகரம், உங்கள் கலைப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும், என்பதைத் தெரிவிப்பதில், பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தில், திரைப்படத் துறை யினர் அனைவருக்கும் அளிக்கப் பட்டு வரும், அனைத்து வசதிகளை யும், சலுகைகளையும், நீங்கள் அனை வரும் நல்ல முறையில் பயன்படுத்தி, தமிழகத் திரைப்படத் துறையின் பெருமையினை, அகில உலகே வியந்து போற்றும் வண்ணம் பணி

## எண்ணம் கவர்ந்த வண்ண ஜாலங்கள்!

மாநிலத் திரைப்பட விருது வழங்கும் விழா, சென்னைப் பல் கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடந்தது.

விழாவினையொட்டி, விழா மண்ட பக் கட்டடம் வண்ண மின் விளக்கு களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அரங்க மேடையோ அற்புதமாக வடி வமைக்கப்பட்டிருந்தது. எண்ணம் கவரும் வண்ண ஒளியமைப்பு, அதன் இருபுறமும் வண்ண மலர்களால் உருவாக்கப்பட்ட தோகை மயில்கள் நம் கண்ணைக் கவர்ந்தன.

திரு.தேவாவின் மெல்லிசை நிகழ்ச் சியோடு விழாத் தொடங்கியது. இனிய பாடல்கள் இதயத்தைக் கவர்ந்தன. திரு ஒய்.ஜி. மகேந்திரன் மற்றும் திரு எஸ்.வி. சேகர் ஆகி யோரின் நகைச்சுவைக் காட்சிகள் அவையோரைச் சிரிப்புக் கடலில் ஆழ்த்தின. பத்மஸ்ரீ ராஜாராதா ரெட்டி ஆடிய குச்சுப்படி நடனம் மெச்சும் படி இருந்தது. ரகுராம் குழுவின ரின் நடனக் காட்சிகள் ரம்மியமாக இருந்தன.

கலை நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, விருது பெறும் கலைஞர்கள் பங்கு பெற்ற திரைப்படங்களிலிருந்து சில காட்சிகள் மேடையின் மூன்று இடங்களில் அமைக்கப்பட்டிருந்த வெள்ளித் திரையில் காண்பிக்கப் பட்டன. அப்போது, அண்ணாந்து பார்க்க வேண்டுமே, மின் விளக்கு களின் வண்ண ஜாலங்களை!





யாற்றி, நீங்கள் அனைவரும் மென் மேலும் வளர்ச்சியுற வேண்டும் என்று, உங்கள் அனைவரையும் நான் வாழ்த்தி மகிழ்கின்றேன். இந்த ஆண்டு விருது பெறும் திரைப்படக் கலைஞர்கள் அனைவரும், மென் மேலும் பெயரும் புகழும் அடைய வேண்டும், எல்லா வளங்களும் நலன்களும் பெற வேண்டும், என்ற எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த் துக்களை, உரித்தாக்கிக் கொள் கிறேன். கலை வித்தகர்கள் பரிசு பெற்ற, மூத்த திரைப்படக் கலைஞர்கள் ஒவ்வொருவரும், அவர்களது நீண்ட கலையுலகப் பாரம்பரியமும், திறமை களும், இன்னும் பலலாண்டுக் காலம் ஒளிரும் வண்ணம், கலை உலக இளைய தலைமுறையினர், அனைவரும் பயன்பெறும் விதம், கலைச் சேவை புரிந்து, நம் அனைவரையும் மகிழ்விக்க வேண் டும் என்ற, எனது பெருவிருப்பத் தினைத் தெரிவித்துக் கொண்டு, அவர்கள் அனைவருக்கும் என் னுடைய உளங்கனிந்த நல்வாழ்த்துக் களை உரித்தாக்கிக் கொள்வதில், பெருமகிழ்ச்சியும், பெருமையும் அடை கிறேன். நாம் அனைவரும் மகிழும் வண்ணம், கலை நிகழ்ச்சிகளை நடத்தி, நம் அனைவரின் ஏகோபித்த பாராட்டு தல்களையும் பெற்ற, திரைப்பட இசை அமைப்பாளர் திரு தேவா, திரு எஸ்.வி. சேகர், திரு ராஜா ரெட்டி, திருமதி ராதா ரெட்டி, திரு ஒய்.ஜி.மகேந்திரன், திரு ரகுராம் ஆகியோருக்கும், அவர்களது குழு வினைச் சார்ந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல் களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## காவல் துறையும் திரையுலகமும்

தமிழகத் திரைப்பட உலகில் சமீப காலமாகத் தென்படுகின்ற, விரும்பத் தகாத ஒரு அம்சத்தை இந்த நேரத்தில் எடுத்துரைப்பது, எனது கடமை என்று கருதுகிறேன். காவல் துறையைச் சார்ந்த காவலர் களையும், அலுவலர்களையும், சமூக விரோதிகளாகவும், கேலிக்கு உரிய வர்களாகவும், பொதுமக்களுக்கு நன்மை செய்யாமல், தீமை செய்யும் துரோகி களாகவும், கோழைகளாகவும், தமிழ்த் திரைப்படங்களில் சித்திரிக்கப்பட்டு வருவதைக் கண்டு நான் மனவேதனை அடைந்துள்ளேன்.



### சங்கீதாவின் சங்கீத மழையில்...

**மாநிலத் திரைப்பட விருது வழங்கும் விழாவின் முதல் நிகழ்ச்சி யாக, திரு. தேவாவின் மெல்லிசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. அந்த இசைக் குழுவில் பாடிய பாடகர்களின் பாடல்களை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெகுவாக ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தார். அப்போது சங்கீதா என்னும் சிறுமி, மறைந்த கே.பி. சுந்தராம்பாள் 'திருவிளையாடல்' படத்தில் பாடிய 'ஞானப்பழத்தைப் பிழிந்து...' என்ற பாடலை, அவரைப் போலவே அற்புதமாகப் பாடி, அவையோரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார்.**

**சங்கீதாவின் அந்த இனிய குரலைக் கேட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், கைத்தட்டி மகிழ்ச்சி தெரிவித்தார். பிறகு, சங்கீதாவை மேடைக்கு அழைத்து, தம் சொந்தப் பொறுப்பில் தங்கச் செயின் ஒன்றைப் பரிசாக வழங் கினார். அப்போது அரங்கமே ஆர வாரம் செய்தது.**

சமுதாய நலனுக்காகக் காவல் துறையினர் ஆற்றி வரும் பணி மிகமிகக் கடினமானது. காவல் துறையினர் ஆற்றும் பணியை ஒரு தியாகம் என்றே கூறலாம். மற்ற துறைகளில் பணி புரிகின்றவர்களுக்கு விடுமுறை உண்டு; விழாக் காலங் களில் வீட்டிற்குச் சென்று, பண் டிகைகளைக் கொண்டாடுவதற்கு வாய்ப்புக்களும் உண்டு.

ஆனால், காவல் துறையில் பணி புரிபவர்களின் நிலைமை அவ்வாறு இல்லை. அவர்கள் வாரத்தில் 7 நாட்களும், மாதத்தில் 30 நாட் களும், வருடத்தில் 365 நாட்களும், ஓய்வு இன்றித் தொடர்ந்து, மக்கள் நலனுக்காகப் பணியாற்றி வருகிறார்கள். காவல் துறையினர் சட்டம் ஒழுங்கை நன்கு பராமரித்து, பொது அமை தியை ஏற்படுத்தினால் தான், திரைப்படத் தொழில் உட்பட, அனைத்துத் தொழில்களும் நாட்டில் சிறப்பான முறையில் செயல்பட முடியும் என்பது, அனைவரும் அறிந்த உண்மை. மக்கள் அனைவரும் நிம் மதியாகவும், சுதந்திரமாகவும், தங் களது கடமைகளை ஆற்றவும், நல்ல முறையில் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கும், காவல் துறையைச் சேர்ந்த காவலர்களின் பணி, எவ் வளவு அவசியம் என்ற உண்மை யைத் திரைப்படங்களில் எடுத்துக் காட்டுவது தான், மக்கள் நலனுக் காக ஓய்வின்றிச் செயலாற்றும் காவலர்களுக்குத் திரைபடத் துறை யினர் காட்டும் நன்றிக்கடன் என்று நான் கருதுகிறேன். திரைப்படங் களில் காவல் துறையினரைச் சரி யான முறையில், மக்கள் மத்தியில் சித்திரித்துக் காட்டத் தவறினால், காவல் துறையில் பணி புரியும் காவலர்கள், அலுவலர்கள் ஆகி யோருக்கு, மனச்சோர்வும், மன வேதனையும் ஏற்பட்டு விடும். அதன் விளைவாக காவலர்கள் மக்களுக்கு ஆற்றும் சேவையில், தொய்வு ஏற் படக் கூடிய அபாயமும் உண்டு. எனவே, சட்டம்-ஒழுங்கைப் பரா மரித்து, பொதுமக்களுக்குப் பாது காப்பு வழங்கி, தங்களுக்கு ஏற்படும் இன்னல்களையும், இடையூறுகளை யும் பொருட்படுத்தாமல், கடமை யாற்றி வரும் காவல் துறையினரை ஊக்கப்படுத்தி, அவர்கள் பணியைச் செவ்வனே ஆற்றிட, திரைப்பட உலகம் தூண்டுகோலாக விளங்க வேண்டும். காவல் துறையில் உள்ள வர்கள், மற்ற துறையினரைப் போல் அல்லாமல், அபாயங்களும், ஆபத் துக்களும் நிறைந்த சூழ்நிலையில், பணிபுரிந்து வருகின்றனர். அத்தகை யவர்களைப் பாராட்டி, ஊக்கப் படுத்துவது தான், கலையுலகம் அவர்களுக்குச் செலுத்தும் நன்றி. எனவே, காவலர்களைக் கொடிய





வர்களாகச் சித்திரிக்கின்ற மனப் பாங்கை, தமிழ்த் திரைப்பட உலகம் இன்று முதல் அறவே கைவிட வேண்டும் என்று, அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

### கலையுணர்வைப் பண்படுத்தும் அரிய சாதனம்!

மக்களின் கலை உணர்ச்சிக்கு விருந்து படைக்கும் திரைப்படம், கலை என்ற அடிப்படை நிலையைக் கடந்து, திரைப்படமானது, சமுதாயத்தை வழிப்படுத்தி, நெறிப்படுத்தும் மாபெரும் சக்தியாக, உருவாகி வருவதைக் காணும் போது, இத்துறையில் ஈடுபட்டுள்ளோர், எந்த அளவிற்குச் சமுதாயக் கடமை உணர்வோடு பணியாற்ற வேண்டும் என்பது, நமக்குத் தெளிவாகின்றது.

இந்த நேரத்தில் தமிழ்த் திரைப் படத் துறையினருக்கு, மற்றும் ஒரு வேண்டுகோளை முன் வைக்க விரும்புகிறேன். திரைப்படத் தொழிலை வெறும் வியாபாரம் என்று குறுகிய வட்டத்தை விட்டு வெளியேற்றி, அது மக்களின் கலை உணர்வைப் பண்படுத்தும் ஓர் அரிய சாதனம் என்ற கண்ணோட்டத்தோடு, சமுதாயக் கடமை என்ற லட்சியத்தை முன் நிறுத்தி, நீங்கள் உங்கள் பணியினை ஆற்ற வேண்டும் என்று, உங்கள் அனைவரையும் வேண்டி கேட்டுக் கொண்டு, தமிழ்த் திரை உலகம் புதிய எல்லைகளைத் தொடுவதற்கு, அயராது பாடுபட வேண்டும் என்று கூறிக் கொள்கிறேன்.







பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 77-வது பிறந்த நாளையொட்டி, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் - சென்னை அண்ணா சாலையில் உள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் திருவுருவச் சிலைக்கு 17.1.94 அன்று மாலை அணிவித்தார்கள்.



# மாநில திரைப்பட விருது வழங்கும் விழா

தமிழ்த் திரைப்பட உலகமே பெருமைப்படத் தக்க அளவுக்கு, மாநிலத் திரைப்பட விருது வழங்கும் விழா, சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 18.1.'94 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவினையொட்டி, வண்ண மின் விளக்கு களால் விழா மண்டபம் ஒளிமயமாய்க் காட்சி யளித்தது. விழா மேடை மலர்களாலும், மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

கலை நிகழ்ச்சிகளுடன் விழாத் தொடங்கியது.

**பொற்கால ஆட்சியில்...**

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் விழா விற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், "கலை உலகைச் சேர்ந்தவர்களெல்லாம் மிகக் கேவலமாக மதிக்கப்பட்ட காலம் ஒன்றிருந்தது. இந்த நாட்டில் அவர்களும் சமுதாயத்தில் சம அந்தஸ்துக்கு உரியவர்களாக உயர்த்தப்பட பேரறிஞர் அண்ணா அவர்கள் வகை செய்தார். அந்த வழியைப் பின்பற்றியே, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களும் வெற்றிநடை போட்டார். டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் இருந்த நீதி, நேர்மை, இரக்கம், ஈகை, அன்பு எல்லாக் குணங்களும் ஒருங்கே அமையப் பெற்ற டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தலைமையில் அமைந்த இந்தப் பொற்கால ஆட்சியிலும் கலை யுலகமும், கலைஞர் பெருமக்களும் மதிப்பும், மரியாதையும் பெற்று வருவதற்கு இந்த விழாவே ஒரு சிறந்த எடுத்துக்காட்டு" என்றார்.




**புரட்சித் தலைவி அவர்களின் பெயரில் புதியதோர் விருது!**

மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், "திரைப்பட மாதா வுக்கு மங்கல ஆரத்தி எடுத்து, கிரீடம் சூட்டி பொன்மாதா புரட்சித்தலைவி அவர்கள் புகழ் பெறுகின்ற நாள் இந்நாள். கலை உலகினர் தன் திறமைக்கேற்பப் பெற்றுவரும் விருதுகள் போதா தென்று, புரட்சித்தலைவி அவர்கள் பெயரிலும் புதியதோர் விருது இந்த ஆண்டு முதல் வழங்கப் படுகிறது. அதற்காகக் கலை உலகினர் பெருமிதம் கொள்ள வேண்டும்" என்றார்.

திரைப்பட விருதுகள் தேர்வுக்குழுத் தலைவர் மாண்புமிகு நீதிபதி திரு. எஸ். பிரதாப்சிங் அவர்கள் வாழ்த்துரை வழங்குகையில், "62 படங் களைப் பார்த்து ஆய்வு செய்து சிறந்த படங் களைத் தேர்வு செய்தோம்" என்றார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், திரைப்பட விருது களை வழங்கி விழாப்பேருரை நிகழ்த்தினார்.








திரு கே. பாலசந்தர்

**சிறந்த படங்களுக்குப் பரிசு**

தமிழக அரசு ஆண்டுதோறும் சிறந்த திரைப் படம் மற்றும் சிறந்த கலைஞர்களைத் தேர்ந் தெடுத்து விருதுகளை வழங்கி வருகின்றது.

முதல் பரிசு பெறும் சிறந்த திரைப்படத்திற்கு 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மற்றும் கேடய மும், இரண்டாவது பரிசாக 75 ஆயிரம் ரூபாய் மற்றும் கேடயமும், மூன்றாவது பரிசாக ரூ.50 ஆயிரம் மற்றும் கேடயமும், சிறப்புப் பரிசாக ரூ.50 ஆயிரம் மற்றும் கேடயமும், வழங்கப்பட்டு வருகின்றது.

சிறந்த நடிகர், நடிகையர் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்களுக்கு 5 பவுன் மதிப்புள்ள தங்கப்பதக்கமும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.







திருமதி புஷ்பா கந்தசாமி



திரு கமல்ஹாசன்

அதன்படி 1992-ஆம் ஆண்டில் வெளியான சிறந்த திரைப்படங்களுக்குப் பரிசுகள் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டன.

முதல் பரிசு: 'ரோஜா'. இதற்கான விருதை, படத் தயாரிப்பாளர் திருமதி புஷ்பா கந்தசாமி (இயக்குநர் கே. பாலசந்தரின் மகள்) பெற்றுக் கொண்டார். அப்போது திருமதி புஷ்பா கந்தசாமி அவர்கள், முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ரூ.50 ஆயிரம் வழங்கினார்.

சிறந்த படத்திற்கான இரண்டாவது பரிசினைத் 'தேவர் மகன்' படத் தயாரிப்பாளர் திரு. கமலஹாசன், 3-வது பரிசினை 'சின்ன கவுண்டர்' படத் தயாரிப்பாளர் திரு. மோகன், சிறப்புப் பரிசான 'வானமே எல்லை' படத்திற்கான விருதை இயக்குநர் திரு. கே. பாலசந்தர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

**கலைஞர்களுக்கான பரிசுகள்**

| | |
|---|---|
| சிறந்த நடிகர் | .. திரு. கமல்ஹாசன் |
| சிறந்த நடிகை | .. செல்வி சுகன்யா |

செல்வி மதுபாலா



செல்வி சுகன்யா



திரு நாசர்





திரு மணிரத்னம்



திரு பஞ்சு அருணாசலம்



திரு ஏ.ஆர். ரகுமான்

| | |
|---|---|
| சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு) | .. திரு. நாசர் |
| சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு) | .. செல்வி மதுபாலா |
| சிறந்த இயக்குநர் | .. திரு. மணிரத்தினம் |
| சிறந்த க்தையாசிரியர் | .. திரு. கே. பாலசந்தர் |
| சிறந்த உரையாடல் ஆசிரியர் | .. திரு. பஞ்சு அருணாசலம் |
| சிறந்த இசையமைப்பாளர் | .. திரு. ஏ.ஆர். ரகுமான் |
| சிறந்த பாடலாசிரியர் | .. திரு. காளிதாஸ் |
| சிறந்த பின்னணிப்பாடகர் | .. திரு. கே.ஜே. யேசுதாஸ் |
| சிறந்த பின்னணிப்பாடகி | .. செல்வி மின்மினி |
| சிறந்த ஒளிப்பதிவாளர் | .. திரு. சந்தோஷ் சிவன் |
| சிறந்த ஒலிப்பதிவாளர் | .. திரு. ஜே.ஜே. மாணிக்கம் |
| சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்) | .. திரு. ஆர். விட்டல் |
| சிறந்த ஆர்ட் டைரக்டர் | .. திரு. பி. சலம் |

செல்வி மின்மினி





திரு மோகன்



திரு ஜே.ஜே. மாணிக்கம்



திரு ராக்கி ராகேஷ்

| | | |
|---|---|---|
| சிறந்த சண்டைப் பயிற்சியாளர் | .. | திரு. ராக்கி ராகேஷ் |
| சிறந்த நடன ஆசிரியர் | .. | திரு. ரகுராம் |

**1992-ஆம் ஆண்டிற்கான கலை வித்தகர்களுக்கான விருதுகள் பெற்றவர்கள் வருமாறு:**

| | | |
|---|---|---|
| அறிஞர் அண்ணா விருது | .. | திரு. கிருஷ்ணன்<br>திருமதி பி. பானுமதி |
| பாவேந்தர் பாரதிதாசன் விருது | .. | திருமதி ஜிக்கி,<br>திருமதி எஸ். ஜானகி |
| கலைவாணர் விருது | .. | திரு. வெண்ணிற ஆடை மூர்த்தி,<br>திரு. ஒய்.ஜி. மகேந்திரன் |
| ராஜா சாண்டோ விருது | .. | திரு. வின்சென்ட்<br>திருமதி சுகாசினி |
| எம்.ஜி.ஆர். விருது | .. | திரு. டி.ஆர். ராமண்ணா<br>திருமதி ஸ்ரீவித்யா |



திரு காளிதாஸ்

திரு ரகுராம்



திரு ஆர். விட்டல்





திரு கிருஷ்ணன்



திருமதி பானுமதி



திருமதி ஜிக்கி

ஜெயலலிதா விருது .. திரு. எம்.என். நம்பியார்
திருமதி மனோரமா
திரு. பி. வாசு

இந்த ஆண்டிலிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெயரில் ''ஜெயலலிதா விருது'' வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**நினைவுப் பரிசு**

மாண்புமிகு முதல்வர் அவர்கள்–கலை நிகழ்ச்சியில் பங்கு பெற்றவர்களுக்கும், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய திருமதி சந்தியா ராஜ கோபால் அவர்களுக்கும் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு.தென்னவன் அவர்களும், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா.சம்பத், இ.ஆ.ப., அவர்களும் நினைவுப் பரிசுகள் வழங்கினார்கள்.

திருமதி எஸ். ஜானகி



திரு வெண்ணிற ஆடை மூர்த்தி





திரு ஒய்.ஜி. மகேந்திரன்




திரு வின்சென்ட்

திரு எம்.என். நம்பியார்



திருமதி சுகாசினி




திரு டி.ஆர். ராமண்ணா



திருமதி ஸ்ரீவித்யா





திருமதி மனோரமா



திரு பி. வாசு

திருமதி சந்தியா ராஜகோபால்



திரு தேவா



திரு எஸ்.வி. சேகர்



பத்மஸ்ரீ ராஜா ராதா ரெட்டி







திரு சந்தோஷ் சிவன்



அன்றைய விழா, கலை உலகம் மட்டுமின்றி, தமிழகமே போற்றிப் பாராட்டுகின்ற வகையில் கவின்மிகு விழாவாக- கலை விழாவாக விளங்கியது என்றால் அது மிகையல்ல! முன்னதாக, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி முத்தையா, மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன், மாண்புமிகு நீதிபதி எஸ். பிரதாப்சிங் ஆகியோருக்கு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. இரா. சம்பத், இ.ஆ.ப. அவர்கள் பொன்னாடை போர்த்தினார்.

விழா முடிவில், செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. இரா. சம்பத் இ.ஆ.ப. அவர்கள் நன்றி நவின்றார்.

—நிகழ்ச்சித் தொகுப்பு
பி.வி. கிரி







## புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா ஆய்வுப் பெருந்தகையாளர் ஊக்குவிப்புத் திட்டம்

தொல்மரபுப் பேருண்மைகள் தொடர்பான துறைகளில் ஈடுபட்டு இருக்கும் ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிக்கும் திட்டத்தினைத் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறை வகுத்தது. ஆய்வு செய்த பின்னர் அது தமிழக அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி, தொல் மரபுப் பேருண்மைகளான, மொகஞ்சதாரோ, ஹரப்பா முத்திரை எழுத்துக்களை அறிதல், குமரிக்கண்டம், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை முதலிய துறைமுகங்களில் கடலாய்வு செய்தல் மற்றும் நாணயவியல், கல்வெட்டியல், கட்டடக் கலை, கலை பண்பாட்டுத் தொடர்பான துறைகளில் ஈடுபடும் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவிடும் வண்ணம் தமிழக அரசு "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா ஆய்வுப் பெருந்தகையாளர் ஊக்குவிப்புத் திட்டம்" என்ற புதிய திட்டத்தினை ஏற்படுத்தி உள்ளது.

இந்தப் புதிய திட்டத்தின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சியாளர் (Fellowship Scholar) ஒருவருக்கு மாதம் 2,500 ரூபாய் ஆராய்ச்சி உதவித் தொகையாகவும், சில்லறைச் செலவினங்களுக்காக 200 ரூபாயும் வழங்கப்படும். இந்தத் திட்டத்தில் அரசுப் பணி புரியாத, தனிப்பட்ட ஆராய்ச்சியாளர்கள் மட்டுமே ஆராய்ச்சி புரிய தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் ஆராய்ச்சி புரிய ஆண்டுதோறும் ஓர் ஆராய்ச்சியாளர் தேர்ந்தெடுக்கப்படுவார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சியாளர்கள் தனது ஆராய்ச்சியை, 3 ஆண்டுக் காலத்திற்கு மேற்கொள்ளலாம்.

## புற்றுநோய்த் தடுப்பு: மாண்புமிகு முதல்வர் நிதியுதவி!

மதுரை மருத்துவக் கல்லூரி மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றின் மூலமாக, புற்றுநோய்த் தடுப்பு மற்றும் அதனை ஆரம்பக் கட்டத்தில் கண்டறிதல் போன்ற நடவடிக்கைகளுக்காக, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரு மாவட்டங்களிலும் அப்பணியினை மேற்கொள்வதற்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 30 இலட்சம் ரூபாய் நிதியினை அனுமதித்து ஆணை பிறப்பித்துள்ளார். இதற்கான பணியினை உடன் தொடங்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

## தமிழ்நாடு இசைக் கலைஞர்கள் ஒய்வூதியத் திட்டம்

இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை நிர்வாகத்தின் கீழுள்ள திருக்கோயில்களில் பழங்காலம் முதல் இசைக்கப்பட்டு வருகின்ற பஞ்சமுகவாத்யம், கொம்பு, எக்காளம், பாரிநாயனம், தாரை, தப்பட்டை, உடுக்கை, ஜெயகண்டி, பேரி, மத்தளம் போன்ற பல பெருமைமிக்க பழங்காலத்து இசைக் கருவிகளை இசைத்து, 20 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து 60 வயதினைக் கடந்து, ஓய்வு பெற்ற தற்போது வறுமையில் வாடும் 100 இசைக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு, ஓய்வூதியம் 300 ரூபாய் வழங்கும் திட்டத்தினை முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருந்தார். அதனையொட்டி, 'தமிழ்நாடு இசைக் கலைஞர்கள் ஒய்வூதியத் திட்டம்' என்ற இத்திட்டத்தின்கீழ், தகுதியுள்ள ஓய்வு பெற்ற வறுமையில் வாடும் 100 இசைக் கலைஞர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகத் தமிழக அரசு 5 உறுப்பினர்களைக் கொண்ட தேர்வுக் குழு ஒன்றினை அமைத்துள்ளது. அதில் கீழ்க்கண்டவர்கள் அங்கம் வகிப்பார்கள்.

1. ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34, — தலைவர்
2. குன்னக்குடி திரு. ஆர். வைத்தியநாதன் — உறுப்பினர்
3. முதல்வர், இசைக் கல்லூரி — உறுப்பினர்
4. அரசு துணை/இணைச் செயலாளர் (அறநிலையங்கள்) (வணிகவரி மற்றும் அறநிலையத்துறை) — உறுப்பினர்
5. இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரின் நேர்முக உதவியாளர், சென்னை-34 — உறுப்பினர்/அமைப்பாளர்

இத்தேர்வுக் குழுவில் பங்குபெறும் அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுக் காலமாக இருக்கும்.

# பெரியார் மாவட்டத்தில் அறிவொளி இயக்கம்




என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப.
பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர்

பெரியார் மாவட்டம், பெரும்பாலும் கிராமப்புறங்களைத் தன்னகத்தே கொண்டு பண்பாடு மிக்க மாவட்டமாகத் திகழ்கிறது. விவசாயத் தொழிலுக்கும், ஜவுளி உற்பத்தி வியாபாரத்திற்கும் பெயர் பெற்ற மாவட்டமாகும். நெல், கரும்பு, மஞ்சள் முதலியன பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. மஞ்சள் அரைவை ஆலைகள் சர்க்கரை ஆலைகள் சிறப்பாகச் செயல்படுகின்றன. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சென்று தொழில் செய்யும் வியாபாரப் பெருங்குடி மக்களையும் கொண்டது பெரியார் மாவட்டம் ஆகும்.

பெரியார் மாவட்டத்தின் மக்கள் தொகை 23½ இலட்சம் ஆகும். சுமார் 4½ இலட்சம் பேர் எழுத்தறிவு அற்றவர்களாக உள்ளனர். பெரியார் மாவட்டத்தில் உள்ள அனைவரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருந்திடல் வேண்டும் என்பதில் இந்திய அரசும், தமிழக அரசும் ஆர்வம் காட்டியதன் பலனாகப் பெரியார் மாவட்டத்தில் அறிவொளி இயக்கம் கடந்த மார்ச் மாதம் முதல் தொடங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு இதற்காக ரூ.1 கோடியே 66 இலட்சமும், மாநில அரசு ரூ.83 இலட்சமும் ஒதுக்கீடு செய்துள்ளது. மாவட்ட நிர்வாகம் அறிவொளி இயக்கத்தினை வெகு முனைப்போடு செயல்படுத்தி வருகின்றது. மாவட்டத்தில் உள்ள வருவாய்த்துறை, காவல்துறை, ஊரக வளர்ச்சித்துறை, கூட்டுறவுத் துறை, கல்வித்துறை, சமூக நலத் துறை மற்றும் பிற துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் ஒத்துழைப்புடன் நடத்தப்படுகின்றது.

பெரியார் மாவட்டத்தில் உள்ள அரிமா சங்கம், சுழற்சங்கம் மற்றும் பிற சேவை நிறுவனங்களின் உதவியோடும் அவர்களின் ஈடுபாட்டோடும் செயல்படுத்தப்படுகின்றது. கற்பித்தல் பணிக்கு மிகவும் அவசியம் தன்னார்வம் உள்ள தொண்டர்கள் படித்த சிலர் எழுத்தறிவு அற்றவர்களுக்குக் கற்பித்தல் பணியை மேற்கொள்ளுதல் மிகவும் புனிதமான பணியாகும். இப்புனிதப் பணிக்குத் தானாகவே முன்வந்து உதவுபவர்களுடன் சிறப்பாகச் செயல்படுவார்கள்.

பெரியார் மாவட்டத்தில் கடந்த மார்ச் 14-ஆம் தேதி அறிவொளி இயக்கம் தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்ட ஓராண்டுக்குள்ளாகக் கற்பித்தல் பணி முடித்திடல் வேண்டும். நேரடியாகக் கற்பித்தல் பணியைத் தொடங்கும்முன் கிராம மக்களிடையே ஓர் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல் அவசியமாகும். அதன் அடிப்படையில் தான் அறிவொளி இயக்கத்தின் முதல் ஆறுமாதக் காலத்திற்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் விளம்பரப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஈரோடு, சென்னிமலை போன்ற பகுதிகளில் உள்ள கூலித் தொழிலாளர்களில் பெருமளவு எழுத்தறிவு அற்றவர்கள் இருப்பது தெரியவந்துள்ளது. இவர்களுக்கு மாலையில் நேரடி கற்பிக்கும் பணி செய்தல் கடினம், காரணம் அவர்கள் வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்புவது மிகவும் காலதாமதமாகிறது. எனவே, இதுபோன்ற பிரிவினர்களுக்குச் சாயப்பட்டரை, மற்றும் தொழில் கூடங்களில் பணிபுரியும் நேரத்தில் மதிய உணவு இடை வேளையின்பொழுது கற்பிப்போரைக் கொண்டு நேரடி கற்பித்தல் செய்திட ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

தாளவாடி, அந்தியூர், சத்திய மங்கலம், பவானிசாகர் ஆகிய பகுதிகளில் உள்ள மழை வாழ்மக்களில் பெரும்பாலோனோர் எழுத்தறிவு அற்றவர்களாக உள்ளனர். இவர்களுக்குக் கற்பித்தல் பணியை மேற்கொள்ள அதிகக் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது.

இப்பணியை பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த தன்னார்வமிக்க ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், மாணவர்கள் செய்கின்றார்கள். இத் தன்னார்வம்மிக்க தொண்டர்கள் எந்தவிதப் பயனும் எதிர்பாராமல் இப்பணியைச் செய்கின்றார்கள். இப்பணியினைச் செய்பவர்களுக்கு முழு ஒத்துழைப்பு தருதல் வேண்டும் என்ற கருத்துக்கள் பெரியார் மாவட்ட மக்களிடையே பரவுதல் வேண்டும் என்ற குறிக்கோளுடன் தான் மாவட்ட முழுவதிலும் செய்யப்பட்டுள்ள சுவர் விளம்பரங்கள், கலைப் பயணங்கள் பயிற்சி வகுப்புகள் ஆகும்.

நேரடி கற்பித்தல் பணிகள் டிசம்பர் திங்களில் தொடங்கப் பட்டுள்ளன. கிராமங்கள் மற்றும் நகரப் பகுதிகளில் நேரடி கற்பித்தல் மையங்கள் இயங்கும் மையங்களின் தன்னார்வம் மிக்க தொண்டர்கள் கற்பித்தல் பணியை மேற்கொண்டுள்ளனர். ஒரு தொண்டர் 10 நபர்களுக்கு எழுத்தறிவித்தால் போதுமானது. இப்பணிக்குத் தேவையான பாடபுத்தகம், கரும்பலகை போன்றவைகளை அரசு தருகின்றது. இதில் பணிபுரியும் தொண்டர்களுக்கு ஊதியம் கிடையாது. எழுத்தறிவுப் பெற்றவர்கள் முன்வந்து எழுத்தறிவு அற்றவர்களுக்குக் கற்பிப்பார்கள். கற்பித்தல் பணி சிறப்பாக நடந்திட அனைத்துப் பிரிவினரும் பொது மக்களும் தன்னார்வத் தொண்டர்களும், அரசு அலுவலர்களும் ஒத்துழைப்புக் கொடுத்து, முழு எழுத்தறிவு மாவட்டமாக மாற்ற அயராது பாடுபட்டு வருகின்றனர்.

வடஆர்க்காடு மாவட்டத்தில்:

# வெண்மைப்புரட்சி

வட ஆர்க்காடு மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம், பால் உற்பத்தியைச் சீராகவும், தொடர்ந்து அதிகரிக்கச் செய்யவும் தேவையான பலவேறு அடிப்படை இனவிருத்தி மற்றும் மருத்துவ வசதிகளை ஒருங் கிணைந்து வெற்றிகரமாகவும், இலாபகர மாகவும் செயல்படுத்தி வருகின்றது.

இம்மாவட்டத்தில் பால்வள மேம் பாட்டுப் பணிகளை 1982-இல் மேற் கொண்டுள்ள இவ்வொன்றியம், தேசிய பால் வள வாரியத்தின் நிதி உதவியுடன் முதல், இரண்டாம் பால் பெருக்குத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல் படுத்தி முடித்திருப்பதுடன், மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தையும் இங்குத் தொடங்கிச் செயல்படுத்தி வருகின்றது.

**கிராமங்கள் தோறும் பால் கூட்டுறவுச் சங்கங்கள்:**

உற்பத்தி செய்யும் பாலுக்கு உரிய விற்பனை வசதி இருந்தால்தான், உற் பத்தியாளர்கள் கறவைத் தொழிலை மேற் கொள்வர். எனவே, கிராமம்தோறும் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஒன்றியத் தின் மூலம் தொடங்கப்படுகின்றன. அங்கத்தினர்களிடமிருந்து தரமான பால் சரியான அளவுகளில் பெறப்பட்டு, பாலின் தரத்திற்கேற்ப விலையும் நிர்ண யிக்கப்படுகிறது. பால் பணம் வாரத்திற் கொருமுறை பட்டுவாடா செய்யப் படுகிறது.

தமிழகத்திலேயே அதிக அளவாக, 1,000-க்கும் மேற்பட்ட பால் உற்பத்தி யாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பெற் றுள்ளது இவ்வொன்றியம். இரண்டு இலட்சத்து தொள்ளாயிரம் விவசாயி களும், விவசாயத் தொழிலாளர்களும் பால் உற்பத்தியாளர்களாக இச்சங்கங் களில் பங்கேற்று பலன் மிகக் கண்டு வருகின்றனர். பால் பணமாக மட்டும் நாளொன்றுக்கு இருபது இலட்ச ரூபா யைச் சங்கங்களின் மூலம் ஒன்றியம் வழங்கி வருகிறது. இந்த ஒன்றியத்தின் உற்பத்தியாளர்களுக்கு நிலையான வருவாய் வாரந்தோறும் ஏற்படுத்தி வருகிறது.

**இனவிருத்தி வசதிகள்:**

கணிசமான அளவில் கறவை மாடுகள் இருந்தால் மட்டும் போதாது. அவை தரமானதாக இருந்தால்தான் தேவையான பாலைப் பெறமுடியும். அதிகப் பால் உற்பத்திக்கு அடிப்படை தரமான கறவை மாடுகள். எனவே; நம்மிடம் உள்ள நாட்டின மாடுகளைத் தரமுயர்ந்த கலப்பினக் கறவைகளாக மாற்றும் முகமாக, ஒன்றியம் அரும் பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள் ளது. உயரினக் காளைகளிலிருந்து பெறப் பட்ட விந்து, சங்கங்களில் வைக்கப் பட்டுள்ள விலையுயர்ந்த உறைவிந்துச் சாதனங்களில் 24 மணி நேரமும் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது. செயற்கை முறைக் கருவூட்டல் செய்வதற்குச் சங்க ஊழியருக்குத் தேவையான பயிற்சியும், சாதனங்களும் ஒன்றியத்தின் மூலம் வழங்கப்படுகிறது. பருவத்திற்கு வரும் போது எந்த நேரத்திலும், கிராமத் திலேயே மாட்டிற்குக் கருவூட்டல் செய்யப் படுகிறது.

அதிக அளவில் செயற்கை முறைக் கருவூட்டல் செய்வதில் குஜராத் மாநிலத் துக்கு அடுத்தபடியாக, இவ்வொன்றியம் இந்தியாவிலேயே இரண்டாவது இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மாதம் ஒன்றுக்குச் சராசரியாக 11,500 செயற்கை முறைக் கருவூட்டல்கள் செய்யப் படுகின்றன. ஆண்டிற்கு ஏறத்தாழ 40,000 கன்றுகள் பிறக்கின்றன.

மேலும் கறவைகளின் தரத்தை மேம் படுத்துவதற்கும், 'வம்சாவழித்திட்டம்' என்ற ஆராய்ச்சித் திட்டமும் இங்கு செயல்படுத்தப்படுகிறது.

**மருத்துவ வசதிகள்:**

கறவைகளின் ஆரோக்கியத்தில் இவ் வொன்றியம் முழுக் கவனம் செலுத்தி





அஞ்சும் மனத்தவரும் - கொஞ்சம்
ஆண்மை தருமனப் பான்மை யடைந்திட
மஞ்சு விரட்டிடுவோம் - துஷ்ட
மாட்டையும் அடக்கும் தாட்டிகம் காட்டுவம்!
—நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை

வருகிறது. ஒன்றியத்தின் கால்நடை மருத்துவர் மூலம் 15 நாட்களுக்கு ஒரு முறை அங்கத்தினர்களின் கால்நடைகளுக்கு இலவச மருத்துவம் சங்கங்களில் அளிக்கப்படுகிறது. அதுதவிர, அங்கத்தினர் கறவையினங்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தால், அவசர அழைப்பின் பேரில் மருத்துவர் பிரத்தியேகமாகச் சென்று சிகிச்சை அளிக்கவும் வசதிகள் உண்டு.

இம்மருத்துவ மையங்கள் வேலூர், குடியாத்தம், ஆம்பூர், ஆர்க்காடு, திருவண்ணாமலை, அனக்காவூர் ஆகிய இடங்களிலிருந்து செயல்பட்டு வருகின்றன.

கோமாரி போன்ற கொடிய நோய்களிலிருந்து கறவைகளைக் காக்க, கோமாரி தடுப்பூசி, மான்ய விலையில் போடும் நல்திட்டமும் இவ்வொன்றியத்தின் மூலம் ஆண்டு முழுவதும் செயல்படுத்தப்படுகின்றது.

**பசுந்தீனவம் மற்றும் புல் விதைகள் விநியோகம்:**

கறவையிலிருந்து முழுமையாகவும் இலாபகரமாகவும் பால் உற்பத்தியைப் பெற அவற்றிற்குக் கலப்புத் தீவனமும், பசுந்தீவனமும் அளிப்பது மிகவும் அவசியம். அவ்வகையில் இலாப நோக்கின்றி இணையத்தின் மூலம் தயாரிக்கப்படும் 'ஆவின்' கலப்புத் தீவனத்தை ஒன்றியம் பெற்று, சங்கத்தின் வாயிலாக உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையில் விநியோகித்து வருகின்றது. மாதம் ஒன்றுக்கு 400 டன் கால்நடைத் தீவனத்தை ஒன்றியம் விநியோகித்து வருகின்றது. மேலும் கோ-1 போன்ற வீரிய பசுந்தீவனப் புல் வகைகளின் விதைக் கரணைகளும் மிகக்குறைந்த விலையில் உற்பத்தியாளர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது. தற்போது இவ்வொன்றியத்தின் விவசாயிகள் 576 ஏக்கர்களில் புல் வளர்த்துள்ளது ஒரு சாதனையாகும்.

**ஒன்றியம் அளிக்கும் பயிற்சிகள்:**

பால் சங்கங்களின் இயக்கம், செயற்கை முறைக் கருவூட்டல், பால் பரிசோதனை ஆகியவற்றில் சங்க ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்க ஒன்றியத்திலேயே பயிற்சி நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு, நவீன சாதனங்களைக் கொண்டு சங்க ஊழியர்களுக்குச் செயல்முறைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் பால் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் கண்டு தெளியவும் தாமும் அவ்வளர்ச்சியை எட்டவும் வேண்டி கிராமங்களிலிருந்து பால் உற்பத்தியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, குஜராத் மாநிலத்தில் 'அமுல்' பால் பண்ணை அமைந்துள்ள ஆனந்த் போன்ற இடங்களுக்குக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றது.

**கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்:**

தமிழகத்தில் கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் அமல்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட 7 மாவட்டங்களில் வடஆர்க்காடு மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமும் ஒன்றாகும். இத்திட்டம் உறுப்பினர்களின் கடமைகளை உணரச் செய்து சங்கத்தை மேலும் வலுப்படுத்த வழிவகை செய்கின்றது. இதுவரை 10,000 உறுப்பினர்களை இக்கல்வி முகாமில் ஈடுபடுத்தி கூட்டுறவுக் கல்வியை உணரச் செய்துள்ளது.

**பால் பதப்படுத்தும் வசதிகள்:**

பால் சங்கங்களிலிருந்து தினமும் இரு வேளைகளில் சேகரிக்கப்படும் பாலை ஆம்பூர், திருவண்ணாமலை, அனக்காவூர் ஆகிய இடங்களில் குளிரூட்டவும், வேலூரில் பதப்படுத்தவும் வசதிகள் உள்ளன. அவ்வசதிகள் முழுமையாகவும் சொல்லப்போனால் அதற்கு மேலும் பயன்படுத்தப்படுகின்றன. நாளொன்றுக்கு 1,60,000 லிட்டர் பாலைப் பதப்படுத்தும் வசதியே இங்கு இருந்த போதிலும் 3,60,000 லிட்டர் வரை பால் சேகரித்துக் கையாளப்பட்டிருப்பது சாதனையாகும்.

**பால் விநியோகம்:**

இவ்வொன்றியத்தின் செயல்பாட்டிலுள்ள நகரங்களில், தரமான பதப்படுத்தப்பட்ட பால், 250 மி.லி. மற்றும் 500 மி.லி. அளவுகளில் பாலித்தீன் பைகளில் கிடைக்க, பால் நுகர்வோருக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. தற்போது நாளொன்றுக்கு விற்பனையாகும் பாலின் அளவை 25,000 லிட்டர். இவ்வொன்றியத்தின் எல்லையில் உள்ள அனைத்து நகரங்களிலும் பாலித்தீன் பைகளில் பால் விநியோகம் செய்யப்படுகின்றது.

**பால் வளமும் வேலை வாய்ப்பும்:**

ஒன்றியம் மேற்கொண்டுள்ள பால் வள மேம்பாட்டுத் திட்டங்கள், பல்லாயிரக்கணக்கான பால் உற்பத்தியாளர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன விவசாயிகள் பயன்மிக்கதொரு உப தொழிலாக பால் கறக்கும் பணியை மேற்கொண்டுள்ளனர். ●

# 1993-94-ஆம் ஆண்டிற்கான 'கலைமாமணி' விருது

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில், இசை, நாட்டியம், நாடகம், திரைப் படம், கிராமிய கலை, உரைநடை இயல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும், அறிஞர் பெரு மக்களுக்குத் தமிழக அரசு ஆண்டுதோறும் 'கலை மாமணி விருது' வழங்கிக் கௌரவித்து வருகிறது.

இந்த ஆண்டு, கலைமாமணி விருது பெறுபவர் களுக்கான கலைஞர்களைப் பற்றி தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் கருத்துக்களை ஆய்வு செய்த, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 50 கலைஞர் களுக்குக் கலைமாமணி விருதுகள் வழங்கி ஆணை யிட்டார்.

இந்த ஆண்டு 'கலைமாமணி விருது' பெறு பவர்களில், பாவைக் கூத்துக் கலைஞர் ஒருவரும், விகடக் கலைஞர் ஒருவரும் இடம் பெற்றுள் ளார்கள்.

மேலும், சிறந்த நாடகக் குழுக்கான விருதி னைப் பெற, நாடக மன்றம் ஒன்றும், சிறந்த கலை நிறுவனம் ஒன்று சிறப்பு விருது பெறவும் தேர்ந் தெடுக்கப்பட்டன.

### இயல்துறை

1. திரு. ல.சா. ராமமிருதம் - இயற்றமிழ்க் கலைஞர்

> • படித்தவன் சிந்திக்கிறான்; சிந்தித் தவன் முன்னேறுகிறான்.
>
> —இங்கர்சால்
>
> • ஆற்றலை வெளிப்படுத்தும் வாய்ப்பு இல்லாவிட்டால், அந்த ஆற்றல் மதிப் பற்றுப் போய்விடுகிறது.
>
> —நெப்போலியன்
>
> • அறிவு தலைக்குக் கிரீடம்; அடக்கம் காலுக்குச் செருப்பு.
>
> —ஹீப்ரு

### இசைத் துறை

2. திருமதி டி. பட்டம்மாள் - இசைப் பாடலாசிரியர்
3. திரு. கடலூர் எம். சுப்பிரமணியம் - இசை ஆசிரியர்
4. திரு. தஞ்சாவூர் எஸ். கல்யாணராமன் - இசைக் கலைஞர்
5. திருமதி சுதா ரகுநாதன் - இசைக் கலைஞர்
6. திருமதி ராதா நாராயணன்- வயலின் கலைஞர்
7. திரு. கே.எஸ். செல்லப்பா- மிருதங்கக் கலைஞர்
8. திரு. வி. நாகராஜன் - கஞ்சிராக் கலைஞர்
9. திரு. திருச்சி ஆர். தாயுமானவன் - கொன்னக்கோல் கலைஞர்
10. திரு. ஷேக் மெகபூப் சுவானி- } நாதசுரக் கலைஞர்கள்
11. திருமதி காலிசாபி மெஹபூப்- } நாதசுரக் கலைஞர்கள்
12. திரு. கீழ்வேளூர் என்.ஜி. கணேசன் - நாதசுரக் கலைஞர்
13. திரு. திருவொற்றியூர் வி.எ. பாலசுந்தரம் - தவில் கலைஞர்
14. திருமதி சரோஜா சுந்தரம் - திருமறை தேவார இசைக் கலைஞர்
15. திருமதி என்.சி. சௌந்தரவல்லி - இறையருட் பாடல் கலைஞர்
16. திருமதி கே. வைஜயந்திமாலா நாராயணன் - கதாகாலட்சேபக் கலைஞர்
17. திரு. நா. முத்துமணி - பாகவத மேளா கலைஞர்

### நாட்டியத் துறை

18. திரு. வெம்பட்டி சின்ன சத்யம் - குச்சுப்புடி நாட்டிய ஆசிரியர்
19. திரு. பம்பாய் கல்யாணசுந்தரம் - பரதநாட்டிய ஆசிரியர்
20. திருமதி சந்திரா தண்டாயுதபாணி - பரதநாட்டிய ஆசிரியர்
21. செல்வி மாளவிகா சருக்கை- பரத நாட்டியக் கலைஞர்
22. திருமதி அபிராமி ராஜன் - பரதநாட்டிய இசைக் கலைஞர்
23. திரு. ஆர். நடராஜன் பிள்ளை (பரோடா) - பரதநாட்டிய மிருதங்கக் கலைஞர்
24. திரு. பி. சங்கீத ராவ் - குச்ப்புடி நாட்டிய-நாடக இசை அமைப்பாளர்
25. திரு. ஜி. நாகராஜன் - பரதநாட்டிய புல்லாங்குழல் கலைஞர்

### நாடகத் துறை

26. திரு. கே.பி. அறிவானந்தம்- நாடக ஆசிரியர்
27. திரு. எஸ். பிரபாகரன் - நாடகத் தயாரிப்பாளர்
28. திரு. 'கம்பர்' ஜெயராமன் - நாடக நடிகர்
29. திருமதி ஜெ.ஜி. சியாமளா- நாடக நடிகை

30. திரு 'அப்பச்சி' ஆர்.எம். கிருஷ்ணன் – நாடக நகைச்சுவைக் கலைஞர்
31. திரு. 'காத்தாடி' ராமமூர்த்தி – தொழில்முறை அல்லாத நாடகக் கலைஞர்
32. திரு. தர்மராஜ் - நாடக ஓவியக் கலைஞர்

### திரைப்படத் துறை

33. திரு. மோகன்-நடராஜன் (ஆனந்தி பிலிம்ஸ்) - திரைப்படத் தயாரிப்பாளர்
34. திரு. ஆர்.வி. உதயகுமார் - திரைப்பட இயக்குநர்
35. திரு. சரத்குமார் - திரைப்பட நடிகர்
36. செல்வி சுகன்யா - திரைப்பட நடிகை
37. திரு. 'டெல்லி' கணேஷ் - திரைப்பட குணச்சித்திர நடிகர்
38. திருமதி சி.கே. சரஸ்வதி - பழம்பெரும் திரைப்பட நடிகை
39. திரு. 'வியட்நாம் வீடு' சுந்தரம் - திரைப்பட வசனகர்த்தா
40. செல்வி சுவர்ணலதா - திரைப்பட பின்னணிப் பாடகி

### கிராமியக் கலைத் துறை

41. திரு. பாவலர் ஓம் முத்துமாரி – தெருக்கூத்துக் கலைஞர்
42. திருமதி ஏ. வேல்கனி - வில்லுப்பாட்டுக் கலைஞர்
43. திரு. வீ. வேலு - கரக ஆட்டக் கலைஞர்
44. திரு. பி.எம். வீராச்சாமி - நையாண்டிமேள நாதசுரக் கலைஞர்

### இசை நாடகத் துறை

45. திரு. பி. மருதப்பா - இசை நாடக நடிகர்
46. திருமதி பி.எல். ரஞ்சனி - இசை நாடக நடிகை
47. திரு. டி.வி. இரத்தினப்பா - இசை நாடக மிருதங்கக் கலைஞர்
48. திரு. அறந்தாங்கி ஏ.எம். யூசுப் - இசை நாடக ஆர்மோனியக் கலைஞர்

### பிற கலைத் துறை

49. திரு. பரமசிவ ராவ் - பாவைக் கூத்துக் கலைஞர்
50. திரு. ஆர்.ஜி. மூர்த்தி - விகடக் கலைஞர்

### சிறந்த நாடகக் குழு

திரு. 'காஞ்சி' ரங்கமணி அவர்களின் அழகிரி நாடக மன்றம்



## அறிவுக் களஞ்சியம்

அறிவினால் உய்த்துணர்ந்து ஒப்புக்கொள்ளக் கூடியனவும் இயற்கையோடு விஞ்ஞானத்துக்கு ஒப்ப இயைந்திருக்கக் கூடியனவும் ஆன கருத்துக் களையே கொண்டு இயங்குகிறது வள்ளுவர் குறள்.

குறள் ஓர் அறிவுக் களஞ்சியம். பகுத்தறிவு மணிகளால் கோர்க்கப்பட்ட நூல்.

—தந்தை பெரியார்

### சிறந்த கலை நிறுவனம்

சிவகாசி ஆர்ட்ஸ் கிளப், சிவகாசி

### பொற்கிழி பெறும் கலைஞர்கள் (ரூ.5,000/- வீதம்)

1. திருமதி ஞானாம்பாள்
2. திருக்கருகாவூர் திரு டி.ஜி. சுப்பிரமணியம்
3. திரு. பி. சுந்தரராஜ் நாயுடு
4. திரு. டி.பி. சாமிக்கண்ணு

(மேற்குறிப்பிட்ட கலைஞர்கள் ஏற்கெனவே கலைமாமணி விருதுபெற்று தற்பொழுது நலிந்த நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள்).

### மறைந்த கலைமேதைகளின் திருவுருவப் படங்கள்

1. கி.வா. ஜகந்நாதன் - இயல் துறை
2. பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் - இயல் துறை
3. டைகர் வரதாச்சாரியார் - இசைத் துறை
4. டாக்டர் எஸ். ராமநாதன் - இசைத் துறை
5. குன்னக்குடி வெங்கட்ராம அய்யர் - இசைத் துறை
6. அனந்தராம தீட்சிதர் - சங்கீத உபன்யாசம்
7. ஆர்.கே. வெங்கட்ராம சாஸ்திரி - வயலின்
8. பரூர் சுந்தரம் அய்யர் - வயலின்
9. காரைக்குடி முத்து அய்யர் - மிருதங்கம்
10. சிதம்பரம் செல்வரத்தினம் பிள்ளை - பரதநாட்டியத் துறை
11. ஒய்.ஜி. பார்த்தசாரதி - நாடகத் துறை
12. 'தேவி நாடக சபா' ரத்தினம் - நாடகத் துறை
13. பி.எஸ். இராமையா - நாடகத் துறை
14. வி.ஏ. மகாதேவன் - இசை-நாடகத் துறை




# தமிழகத்தின் 12-வது அருங்காட்சியகம்!

**தமிழகத்தின் 12-வது** அருங்காட்சியகம், தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் அமைந்துள்ளது. இவ்வருங்காட்சியகத்தில் தொல் பொருளியல் நாணயவியல், மானிடவியல், தாவரவியல், விலங்கியல், புவியியல் ஆகிய பிரிவுகளில் காட்சிப் பொருட்கள் காட்சியில் உள்ளன.

தொல்பொருளியல் பிரிவில் கற்சிற்பங்கள் 10,12-ஆம் நூற்றாண்டு நடுகல் மற்றும் நவகண்டங்களும், பார்வதி சிற்பமும், அமராவதிச் சிற்பங்களின் மாதிரிகளும் வைக்கப்பட்டுள்ளன. ஐம்பொன்சிலைகளான கணேசர், தேவி, விஷ்ணு, ஸ்ரீதேவி, சிவன், ஞானசம்பந்தர் ஆகியவை 14,17,18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவைகளாகும். தமிழகத்தின் மரச்சிற்பங்கள் கலை அழகை இங்குள்ள மரச்சிற்பங்களில் காணலாம். மேலும் உலோகக் கலைப்பொருட்கள் சிலவற்றையும் இங்கு காணலாம்.

நாணயவியல் பிரிவில் மிகப் பழமையான நாணயங்களான அச்சுக் குத்தப்பட்ட நாணயங்கள், குஷானர், இஸ்லாமியர், குப்தர் மற்றும் கிழக்கிந்தியக் கம்பெனி காலத்திய 32 நாணயங்கள் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தின் பழங்குடி மக்களான குறும்பர் மற்றும் லம்பாடிகளின் பண்பாட்டை விளக்கும் வகையில் அவர்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள் சில காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் காணப்படும் மரங்களின் வகைகளும், சிலவகை மூலிகைத் தாவரங்களையும் தாவரவியல் பிரிவில் காணலாம்.

விலங்கியல் பிரிவில் சில கடல் வாழ் உயிரிகள் அவற்றின் சுற்றுப்புறச் சூழ்நிலையை விளக்கும் வகையில் காட்சியில் உள்ளன. மேலும், புதர்க்காட்டில் காணப்படும் சில விலங்குகளையும் பறவைகளின் புகலிடத்தில் காணப்படும் பறவைகளையும் அவற்றின் சுற்றுச் சூழலோடு சித்திரிக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக, பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து அற்றுப்போன விலங்குகள் சிலவற்றையும் இங்கு காணலாம். சூரியனும் மற்ற கோள்களும் சார்ந்த சூரியன் குடும்பமும் பூமியில் குறுக்குவெட்டுத் தோற்றத்தைக் காட்டும் மாதிரியும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

நம் நாட்டில் கிடைக்கும் பாறைகளும், கனிமங்களும் இங்கு காட்சியில் உள்ளன. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து அழிந்ததற்குச் சான்றுகளாக இருக்கும் சில புதைபடிவங்களையும் இங்கு காணலாம். இவற்றைத் தவிர எண்ணெய் வண்ணங்களால் தீட்டப்பட்ட சம கால ஓவியங்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்த அருங்காட்சியகத்தின் தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது. மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் பேராசிரியர் திரு. க. பொன்னுசாமி அவர்கள் அருங்காட்சியகத்தைத் தொடங்கி வைத்தார். இவ்விழாவிற்கு, தருமபுரி மாவட்ட ஆட்சியர் திரு. ந. வாசுதேவன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செயலர் திரு. சா.பா. இளங்கோவன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், அருங்காட்சியகங்களின் ஆணையர் திரு. மா. இராமு, இ.ஆ.ப. அவர்கள் அருங்காட்சியகத் திட்ட விளக்கவுரையாற்றினார். கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. முனிவெங்கட்டப்பன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். காவேரிப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்களும், பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. டாக்டர் வி. புருஷோத்தமன் அவர்களும் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

# நெசவாளர் நலன் காக்கும் கோ-ஆப்டெக்ஸ்



"கோ-ஆப்டெக்ஸ்" என்ற பெயரில் புகழ்பெற்று விளங்கும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், கைத்தறித் தொழில் வளரவும், கூட்டுறவுத் துறையில் கைத்தறி நெசவாளர்களுக்கு நலன் பயக்கவும் ஆன முக்கிய குறிக்கோளுடன் 1935-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவைப்படும் முக்கிய கச்சாப் பொருள்களைக் (நூல், சாயம், பட்டு, சரிகை) கொள்முதல் செய்து வழங்குவதும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் உறுப்பினர்களான நெசவாளர் சங்கங்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதும் இச்சங்கத்தின் முக்கியப் பணிகளாகும்.

கைத்தறிப் பாலியஸ்டர் உள்ளிட்டு எல்லா வகையான கைத்தறித் துணிகளையும் கோ-ஆப்டெக்ஸ் வியாபாரம் செய்கிறது. தூய பட்டுக்குக் கோ-ஆப்டெக்ஸ் புகழ்பெற்றுள்ளது. கோ-ஆப்டெக்ஸ் பட்டுத் துணிகள் 100 சதவிகிதம் தூயபட்டு அசல் சரிகையாகும்.

1990-91-ஆம் ஆண்டில் கோ-ஆப்டெக்ஸின் விற்று முதல் ரூ.137.76 கோடியாக இருந்த விற்பனை, 1992-93-ஆம் ஆண்டில் ரூ.195 கோடியாக உயர்ந்தது. 1992-93-இல் கோ-ஆப்டெக்ஸ் ரூ.3.40 கோடி இலாபம் ஈட்டியது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். 1993-94-க்கு ஆண்டுக் குறியீடு ரூ.232 கோடியாகும்.

நாடு நெடுகிலும் அமைந்துள்ள 434 விற்பனை நிலையங்கள் மூலம் கோ-ஆப்டெக்ஸ் கைத்தறித் துணிகளை விற்பனை செய்கிறது. தமிழகத்தில் 269 கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களும் வெளிமாநிலங்களில் 165 கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களும் பொதுமக்களின் துணித் தேவைகளை நிறைவு செய்கின்றது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் பொங்கல் மற்றும் தீபாவளி விற்பனை மிகப்பெரிய விழாக் கால விற்பனையாகும். ஆண்டு விற்று முதலில் 60 சதவிகிதம் விற்பனை தீபாவளிக் காலத்தில் நிகழ்கிறது. இந்த ஆண்டு பூஜா-தீபாவளி விற்பனைக்கு ரூ.95 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டது.

பட்டுச் சேலைகளுக்குக் கோ-ஆப்டெக்ஸ் புகழ் பெற்றது. காரணம் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், ஈரோடு மற்றும் பெங்களூர் ஆகிய நகரங்களில் பிரத்யேகமாக அமைந்துள்ள பட்டு விற்பனை நிலையங்களேயாகும்.

கோ-ஆப்டெக்ஸ் மொத்த விற்பனையில் பட்டுத் துணிகளின் விற்பனை ஒரு சிறப்பான பங்கினை வகிக்கிறது. இந்த ஆண்டு பட்டு வகையில் அதிக அளவில் புதிய வடிவமைப்புகளில் பட்டு இரகங்களை அறிமுகப்படுத்த கோ-ஆப்டெக்ஸ் முனைந்துள்ளது. தேசிய வடிவமைப்புத் தொழில் நுணுக்க நிறுவனத்துடன் இணைந்து தமிழகத்தின் கைத்தறித் துணிகளை மேலும் புதிய முறைகளில் அறிமுகப்படுத்த உள்ளது. கோ-ஆப்டெக்ஸ் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

கோ-ஆப்டெக்ஸ் உற்பத்தியான டேபிள் லினன் துணிகள் வெளிநாட்டு வியாபாரிகளிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன. கடந்த ஆண்டு ஆஸ்திரேலியாவிற்கு மட்டும் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டு ஏற்றுமதியை மேலும் பெருக்குவதற்கு வழிவகைகள் வகுக்கப்பட்டு வருகின்றன.

கோ-ஆப்டெக்ஸ் விற்பனையைப் பொறுத்தவரை இரண்டு கூறுகள் உள்ளன. அவை (அ) ரொக்க விற்பனை (ஆ) கடன் விற்பனை.

கீழ்க்காணும் துறையின் ஊழியர்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் கடன் விற்பனை செய்கிறது. மாநில, மத்திய அரசு ஊழியர்கள், கூட்டுறவுத் துறை ஊழியர்கள், வங்கி ஊழியர்கள், அரசு சார்புத் துறை ஊழியர்கள், பொதுத்துறை ஊழியர்கள், பள்ளிகள், கல்லூரிகளின் ஊழியர்கள் ஆகியோருக்கு ஒரு மாதச் சம்பள அடிப்படையில் கடன் விற்பனை செய்து, 6 எளிய சுலபத் தவணைகளில் வசூல் செய்யப்படுகிறது. தீபாவளி, பொங்கல் போன்ற சிறப்பு விற்பனைக் காலங்களில் கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் கடன் விற்பனை மேலே குறிப்பிட்ட துறைகளின் ஊழியர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். தீபாவளி விற்பனையில் கடன் விற்பனையின் மகத்தான பங்கினைக் கருத்தில் கொண்டு, கடன் விற்பனையாளர்களின் துணித் தேவைகளைச் சிறக்க நிறைவேற்ற, கோ-ஆப்டெக்ஸ் எல்லா ஏற்பாடுகளையும் சிறக்கச் செய்துள்ளது.

பொதுமக்களின் துணித் தேவைகளை நிறைவேற்றுவதில் கோ-ஆப்டெக்ஸ் முன்னணியில் நிற்கிறது.

இந்தியாவிலேயே முதன்முதலாக நெசவாளர்களின் வாரிசுதாரர்கள்

## ஆடை

• மனிதனை மனிதனாக அடையாளம் காட்டுவது ஆடை. அந்த ஆடையைத் தயாரிப்பவர்கள் நெசவாளர்கள். அவர்களின் நலனுக்கு அரசு பல முன்னோடி சிறப்புத் திட்டங்களை மேற்கொண்டு உள்ளது. நாட்டின் மொத்த ஆடை உற்பத்தியில் கைத்தறியின் பங்கு 20 சதவிகிதம். கைத்தறி மூலம் அன்னியச் செலாவணியாகக்கிடைப்பது ரூ.1500 கோடி. நாட்டில் 1.20 கோடி நெசவாளர்கள் உள்ளனர்.

பயன்பெறும் வகையில் குடும்ப ஓய்வூதியத் திட்டம் இவ்வரசால் செயல்படுத்தப்பட்டு, 23,000-க்கும் மேற்பட்ட நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு, அவர்களின் வாரிசுதாரர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அத்துடன் இவ்வரசு ஆயுள் காப்புடன் இணைந்த சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தினை நன்முறையில் செயல்படுத்தி வருகின்றது. இதன் வாயிலாகத் தற்போது 1.13 இலட்சம் நெசவாளர்கள் பயன்பெறுகின்றனர். தவிரவும், நெசவாளர்களுக்கு நெசவுக் கூடத்துடன் இணைந்த குடியிருப்புகளைக் கட்டித்தரும் திட்டத்தின் வாயிலாக, இதுவரையிலும் 8,781 நெசவாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

மேலும், நெசவாளர்களின் குடியிருப்புகளில் குடிநீர் வசதியினை மேம்படுத்தும் வகையில் 64 ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்க நடப்பு ஆண்டில் இவ்வரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தினை இவ்வரசு வகுத்து செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் விளாகம் கிராமமும் தென்னார்க்காடு மாவட்டத்தில் புதுப்பட்டிக் கிராமமும் தேர்ந்தெடுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மத்திய அரசின் நிதி உதவியுடன் இவ்வரசு தறியற்ற ஏழை நெசவாளர்களுக்குத் தறி வழங்குதல், கைத்தறி மேம்பாட்டு மையங்களை அமைத்தல், ஆதி திராவிட நெசவாளர்களுக்குக் குடியிருப்பு வசதியினை ஏற்படுத்தித்தருதல், தரமான சாயச் சாலைகள் அமைத்தல், போன்ற திட்டங்களின் செயல்பாடுகளுக்கு ரூ.207.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய உள்ளது. தவிரவும், மருத்துவச் செலினங்களை வழங்குதல், கண்பார்வையற்ற நெசவாளர்களுக்குச் சோதனை மூலம் கண் சிகிச்சை மற்றும் கண்ணாடி வழங்குதல், நெசவாளர் குடும்பப் பெண்களின் மகப்பேறு மற்றும் கருத்தடைச் செலவுகளை மேற்கொள்ளுதல் மற்றும் நெசவாளர்கள் வாழும் பகுதிகளில் தொடக்க சுகாதார மையங்கள் அமைத்தல் போன்ற சீரிய நலத்திட்டங்களுக்காக இவ்வரசு ரூ.2.16 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்து நெசவுத் தொழிலும், நெசவாளர்களும் பயனடையும் வகையில் திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்தத் திட்டமிட்டு உள்ளது.

கைத்தறி உற்பத்தியில் புதுரக வடிவங்களை அறிமுகப்படுத்தும் நோக்குடன் சென்னையில் 'கம்ப்யூட்டர் வடிவமைப்பு மையம்' ஒன்றினை ஏற்படுத்தி பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவைக்கேற்ப புதுப்புது ரக உற்பத்தியினை, நுகர்வோர் ரசனைக்கேற்ப உற்பத்தி செய்யவும் இவ்வரசு திட்டமிட்டு உள்ளது.

உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளை உடனுக்குடன் விற்பனை செய்ய, தமிழக அரசு நகரங்கள் மற்றும் மாவட்டங்கள் தோறும் கைத்தறிக் கண்காட்சி நடத்த ஆணை பிறப்பித்துள்ளது. இதுகாறும் சென்னை, விழுப்புரம், பாம்பே, ஜாம்ஷெட்பூர் கோவை ஆகிய இடங்களில் கைத்தறிக் கண்காட்சிகள் நடத்தி ரூ.75 இலட்சம் அளவுள்ள துணிகளை விற்பனை செய்துள்ளது. இக்கண்காட்சி விற்பனைகளில் அரசு தள்ளுபடியில்லாமலேயே விற்பனை செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். மேலும் நடப்பு ஆண்டில் பலவேறு இடங்களில் கண்காட்சிகள் நடத்த அரசு திட்டமிட்டுள்ளது.



மாறிவரும் நாகரீகத்தைக் கருத்தில் கொண்டு இவ்வாண்டு கோ-ஆப்டெக்ஸ், வடிவமைப்புச் சேகரிப்புகளில் சேலைகள் மற்ற ஆடை வகைகளில் மிகுந்த எண்ணிக்கைகளில் கொணரத் திட்டமிட்டு உள்ளது. வடிவமைப்பாளர்களை இதில் ஈடுபடச் செய்து, நாகரீகப்போக்கிற்கு ஏற்ப சிந்தடிக் பாரம்பரியத்திற்கேற்பக் கொணர உள்ளது.

அடுத்த ஆண்டுக்குத் திட்டமிடுகையில், புதிய வடிவமைப்புகளைக் கொண்ட துணிகளின் கண்காட்சிகளை நடத்த உத்தேசித்து உள்ளது. இப்படிச் செய்வதின் மூலம் கோ-ஆப்டெக்ஸ் எல்லாக் காலத்திற்கும், எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற ஆடைகளை உருவாக்குவதில் முன்னணியில் உள்ளது என்பது தெளிவாகும். ஏற்றுமதியைக் கருத்தில் கொண்டு, 'டேபிள் லினன்' துணிகளில் புதிய இரகங்களைக் கொண்டு வரவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நெசவாளர்கள் நலனுக்காக ஹட்கோ உதவியுடன் நெசவாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் மானிய விகிதங்களில் நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. இதுவரை ரூ.12.93 கோடி மதிப்பில் 11,067 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

1992-ஆம் ஆண்டு பொங்கல் முதல் இலவச வேட்டி-சேலை வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாண்டு தேவையை முன்னிட்டு அதனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 60 இலட்சம் ஆண்கள், 60 இலட்சம் பெண்கள் என்றிருந்த எண்ணிக்கையை 75 இலட்சம் ஆண்கள், 75 இலட்சம் பெண்கள் என்று உயர்த்த அனுமதி வழங்கியுள்ளார் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 4.27 இலட்சம் கைத்தறிகளில் இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு 3.80 இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவின்கீழ் கொண்டு வரப்பட்டு, நெசவாளர்களுக்குத்தொழில் கொடுப்பதில் முனைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த இரண்டாண்டுகளுக்கு முன் ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ.247 கோடி அளவிற்கு இருந்து வந்த உற்பத்தி கணிசமான அளவுக்கு உயர்ந்து, சென்ற ஆண்டு ரூ.350 கோடியாக உயர்ந்துள்ளது.

இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்ற 1,478 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில், இரண்டு ஆண்டுகளுக்கு முன் சுமார் 700 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களே இலாபத்தில் இயங்கி வந்தன. இவ்வரசு பொறுப்பேற்றபின் மேற்கொண்டுள்ள பல்வேறு சீரிய நடவடிக்கைகளின் பயனாக தற்பொழுது 876 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தாய் சங்கமான கோ-ஆப்டெக்ஸ் இந்தியத் துணைக் கண்டத்தில் 434 கிளைகளின் வாயிலாகப் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற துணிகளைக் கொள்முதல் விற்பனை செய்து வருகின்றது. இச்சங்கத்தின் விற்பனை அளவு 1991-ஆம் ஆண்டில் ரூ.138 கோடியாக இருந்தது. தற்பொழுது விற்பனை அளவு ரூ.195 கோடியாக உயர்ந்ததுடன் பிரதமச் சங்கங்களுக்கு அதிகப்படியான சேவையினைப் புரிந்து வருகின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ரூ.3.6 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ஆகியவற்றின் விற்பனையை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழக அரசு தொடர்ந்து 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் ரூ.42.02 கோடி மற்றும் ரூ.40.86 கோடி அளவிற்கு விற்பனை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தள்ளுபடி மானியம் வழங்கியுள்ளது. தள்ளுபடி மானியத் திட்டத்தினை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸின் நலன் கருதி தொடர்ந்து செயல்படுத்த இவ்வரசு திட்டமிட்டுள்ளது.

## நெசவுத் தொழிலாளர்களுக்கான பயிற்சி நிலையங்கள்

**தமிழ்நாட்டிலுள்ள நெசவுத் தொழிலாளர்கள் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தைக் கையாள்வதிலும், புதிய வடிவமைப்புகள் கொண்ட புதுமையான ரகங்களை உற்பத்தி செய்வதிலும், அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட ஜவுளி வகைகளை நல்ல முறையில் விற்பனை செய்வதிலும் நல்ல பயிற்சியைப் பெறுவதற்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டில், காஞ்சிபுரம், மானாமதுரை, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில், நெசவுத் தொழிலாளர்களுக்கான 'பயிற்சி நிலையங்கள்' நான்கினைத் தொடங்க ஆணை பிறப்பித்து உள்ளார். இதன்படி 10.30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்படும் நெசவுத் தொழிலாளர்களுக்கான இந்த 4 பயிற்சி நிலையங்களும், இந்த நிதி ஆண்டில் (1993-94) உடனடியாக நிறுவப்பட வேண்டுமெனவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.**



# அன்பு அன்னை அருளட்டும்

காட்டரசி சிம்மத்தில் தன்பவனி என்றாள்!
காவலாகும் விலங்கினங்கள் பரிவாரம் என்றாள்!
காட்டாறு சுதந்திரத்தின் ஆரவாரம் என்றாள்!
குளிர்புனலில் அலைபேசத் தென்றலாடும் என்றாள்!
கூட்டாத வனப்பில்லை; அழகேநான் என்றாள்!
கொஞ்சவரும் மழைக்கூட்டம் தன்னுயிரே என்றாள்!
காட்டாத வனமில்லை; இயற்கையன்னை என்றாள்!
கவின்மிகுந்த கமலங்கள் வாய்திறக்கும் என்றாள்!

கண்ணாட்டம் மயிலாட்டம் களிப்பாட்டம் என்றாள்!
குரங்காட்டம் முயலாட்டம் மனசாட்டம் என்றாள்!
மின்னோட்டம் பாய்வதுபோல் நாட்டியங்கள் என்றாள்!
மிருகங்கள் ஆடுகின்ற பரதங்கள் என்றாள்!
இன்னிசையில் முன்னோடி குயில்பாடல் என்றாள்!
ஈங்கதுவே மலையரசு நாட்டுப்பண் என்றாள்!
முன்னசையும் பின்னசையும் மூங்கில்கள் என்றாள்!
முனங்கிட்ட ஒலியெல்லாம் நாதவெள்ளம் என்றாள்!

இயற்கையரண் மலையரண்தான் தன்னாட்டில் என்றாள்!
இமயத்தின் கூட்டமைப்புத் தன்னில்லம் என்றாள்!
உயர்வான தேக்குமரம் சொத்தாகும் என்றாள்!
உலகில்தான் பாக்குமரம் பித்தாகும் என்றாள்!
பயிரிலைகள் பசுந்தழைகள் கால்நடைக்கே என்றாள்!
பச்சிலைகள் மூலிகைகள் மாந்தர்க்கே என்றாள்!
கயவர்தான் மிருகத்தைக் குறிவைப்பார் என்றாள்!
கண்டித்து அறிக்கைதனை வெளியிட்டேன் என்றாள்!

முத்துமலை, பவளமலை, தங்கமலை இன்னும்
மேருமலை குடகுமலை, கொங்குமலை இன்னும்
எத்தனையோ நற்பெயர்கள் புகழ்மேனி என்றாள்!
ஏந்துகின்ற அடைமொழிகள் புகழ்ஏணி என்றாள்!
இதிகாசப் புராணங்கள் காப்பியங்கள் இன்னும்
இன்றுவரை மேவிட்ட நூலனைத்தும் தன்னை
அதிமதுர பாவிற்குள் ஆட்படுத்தும் என்றாள்!
அன்பிற்கு விலையுண்டோ? ஈடுண்டோ? என்றாள்!

பலசாதி பல இனங்கள் தன்னாட்டில் என்றாள்!
பலபாசை பல்பிரிவு எந்நாளும் என்றாள்!
நலமாகும் வேற்றுமையில் ஒற்றுமைதான் என்றாள்!
நன்மைதரும் நற்கொள்ளை நாற்றாகும் என்றாள்!
நிலவுரிமை ஈங்கில்லை; பொதுவுடமை என்றாள்!
நிறவெறிகள் என்றுமில்லை; வறுமையில்லை என்றாள்!
தொலிசுருங்கும் வயிறில்லை; வறுமையில்லை என்றாள்!
தொல்லையில்லை; துயரமில்லை; நாளுமின்பம் என்றாள்!

கவிஞர் டி.பி.கே. ரெங்கநாதன்

aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin




aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin

ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின்

# ஆவின்

தரத்திலும், சுவையிலும்
நம்மில் அது ஓர் அங்கம்...

மதுரை மாவட்டப்
பால் உற்பத்தியாளர்கள்
கூட்டுறவு ஒன்றியம்
மதுரை-625 020

ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின்

# நீலகிரி மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி

— நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர்

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்பது அமரகவியின் வாக்கு. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு உழவும் தொழிலும் இரு கண்களாகக் கருதப்படுகின்றன. மலைப்பகுதியான நீலகிரி மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி பெரிதும் வனத்தையும் தோட்டங்களையும் சார்ந்தே உள்ளது. மேலும், இங்குள்ள தட்பவெப்ப நிலை, சுற்றுப்புறசூழல், நிலத்தன்மை முதலியவற்றைக் கருத்திற் கொண்டு தொழில்கள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் பெரும்பாலான மக்கள் விவசாயத் தொழில்களில் ஈடு பட்டுள்ளனர். வன வருவாய்க்கும், மின் உற்பத்திக்கும் இம்மாவட்டம் குறிப்பிடத் தக்க இடத்தினைப் பெற்றுள்ளது. மக்களின் பொருளாதாரம் தேயிலை மற்றும் காப்பித் தோட்டங்களையும் உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ், காரட், முள்ளங்கி, காலிபிளவர் போன்ற மலைக் காய்கறிகளின் சாகுபடியையும் அடிப் படையாகக் கொண்டுள்ளது. அரசின் பல்வேறு திட்டங்களில் இம்மாவட்டத்தில் மக்களிடத்தில் சிறுதொழில் தொடங்கும் ஆர்வமும் பெருகியுள்ளது.

இம்மாவட்டம் தமிழகத்தில் மின் உற் பத்தியில் பெரும் பங்கு வகிக்கிறது. இம் மாவட்டத்தில் 5 மின் உற்பத்தி நிலை யங்கள் செயல்படுகின்றன. இவை 361.2 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திறன் பெற்றவை. தேயிலை இம்மாவட்டத்தின் முக்கிய விளை பொருளாகும். தேயிலைத் தொழில் இம் மாவட்டத்தின் பெருமையை உலகம் முழு வதும் பரவச் செய்துள்ளது.

**தேயிலைத் தொழில்:**

தேயிலைத் தொழில் இம்மாவட்டத் தின் பிரசித்தி பெற்ற தொழிலாகும். 25,000 எக்டேர்கள் பரப்பளவுள்ள தேயிலைத் தோட்டம் இம்மாவட்டத்தில் உள்ளது. 65,000 பேர்கள் தேயிலைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். 160 தேயிலைத் தொழிற்சாலைகள் தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன.

**இன்கோசர்வ்**

நீலகிரி மாவட்டத்தின் பிரதான தொழிலான தேயிலைத் தொழில் பல ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே திறமை யுடன் செயலாற்றி வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் மட்டும் சுமார் 24,000 எக்டேர் பரப்பில் தேயிலை பயிரிடப் படுகிறது. இம்மாவட்டத்தில் பல்வேறு தேயிலைத் தோட்டங்களும் ஒருங்கே இணைத்து கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் மூலம் தேயிலையை உற்பத்தி செய்து வருகிறது.

மாவட்டத்தில் தற்போது உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 15 தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் நடப்பு நிதி ஆண்டில் இதுவரை சுமார் 177 இலட்சம் கிலோ பசுந்தேயிலை தனது அங்கத்தினரிட மிருந்து பெற்று 46.23 இலட்சம் கிலோ தேயிலைத் தூள் உற்பத்தி செய்துள்ளது. இக்கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலை களில் தற்போது 16,743 சிறுதேயிலை விவசாயிகள் உறுப்பினர்களாக உள் ளனர். தொழிற்சாலைகளில் பதிவு செய் யப்பட்ட தேயிலைத் தோட்டங்களில் மொத்தத் தேயிலைச் சாகுபடி நிலங்கள் 29,007 ஏக்கர் ஆகும்.

இன்கோசர்வ் நடப்பு ஆண்டில் 320 மெட்ரிக் டன் தேயிலைத் தூள் பாது காப்புத் துறைக்கு விற்பனை செய் துள்ளது. இதன் மதிப்பு ரூ.166 இலட்ச



மாகும். இவ்வாண்டு ஏஜென்சி மூலம் ரூ.48.58 இலட்சம் மதிப்புள்ள தேயிலை விற்பனை செய்துள்ளது.

**டேன்டீ (தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம்)**

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம் தற்பொழுது நீலகிரி மற்றும் கோயம் புத்தூர் மாவட்டங்களில் மொத்தம் 6,100 எக்டேர் பரப்புள்ள நிலங்களைக் கொண்டு தேயிலைச் சாகுபடி செய்து வருகிறது. இதில் 660 ஊழியர்களும், 6,500 நிரந்தரத் தொழிலாளர்களும் வேலை செய்கிறார்கள். மேலும், சுமார் 3,500 தற்காலிகத் தொழிலாளர்களும் இதில் வேலை செய்கிறார்கள். ரூ.10 கோடி மதிப்பிற்கு அனுமதிக்கப்பட்ட மூலதனமும் ரூ.3.74 கோடி மதிப்பிற்குச் செலுத்தப்பட்ட பங்குகளின் மூலதனமும் கொண்ட இது ஒரு தமிழ்நாடு அரசின் சொந்த நிறுவனமாகும்.

1968-ஆம் ஆண்டில் சாஸ்திரி சிரிமாவோ ஒப்பந்தத்தின்படி, தாயகம் திரும்பிய இலங்கை வாழ் மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்குடன் தமிழக அரசால் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தேயிலைச் சாகுபடித் திட்டம் 1976-ஆம் ஆண்டில் ஒரு தமிழக அரசின் முழு கழகமாக ஆக்கப்பட்டது. 1990-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சுமார் 3,348 எக்டேர் பரப்புக் கொண்ட சின்கோனா துறையின் நிலங்கள் இக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

**பசுந்தேயிலை உற்பத்தி**

1991-92-ஆம் ஆண்டில் இக்கழகம் மொத்தம் 259.77 இலட்சம் கிலோ பசுந்தேயிலை அறுவடை செய்துள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் 272.42 இலட்சம் கிலோ பசுந்தேயிலை அறுவடை செய்துள்ளது. 1993-94-ஆம் ஆண்டில் அதாவது ஏப்ரல் 93 முதல் ஆகஸ்டு 93 வரை, இக்கழகம் மொத்தம் 102.50 இலட்சம் கிலோ பசுந்தேயிலையை அறுவடை செய்துள்ளது.

**தேயிலைத் தொழிற்சாலைகள்**

இக்கழகத்தில் வருடம் ஆண்டிற்கு மொத்தம் 60 இலட்சம் கிலோ தேயிலைத் தூள் உற்பத்தித் திறனைக் கொண்ட நான்கு நவீனத் தேயிலைத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இதில் மூன்று தொழிற்சாலைகள் சி.டி.சி. முறையையும் ஒரு தொழிற்சாலை ஆர்தோடெக்ஸ் முறையையும் கையாண்டு வருகிறது. தற்பொழுது தேயிலைத் தோட்டத்தில் அறுவடை செய்யும் பசுந்



பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ அந்த அளவு, நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள். படித்த ஆண்கள் தவறான வழியில் செல்லும்போது படிப்பு வாசனையற்ற பெண்கள் அவர்களைச் சரியான வழிக்குத் திருப்பிவிடுகிறார்கள். இந்தக் குடும்ப அறிவை எந்தப் பள்ளியிலும் பயிலாமலே அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முறையான கல்வி அறிவும் கிடைத்தால் சமுதாயம் உயர்வதற்கும் சந்ததிகள் வாழ்க்கை சீர் பெறுவதற்கும் மெத்தப் பயனுடையதாக இருக்கும்.

—பேரறிஞர் அண்ணா

தேயிலை எதிர்பார்ப்பிற்கும் அதிகமாக உள்ளதால் தேயிலைத் தொழிற்சாலைகள் அளவு மீறி திறனுக்கு மேல் இயங்கி வருகிறது. ஆகையால் ரூ.6 கோடி செலவில் மேலும் இரண்டு தொழிற்சாலைகள் கட்டத் திட்டமிட்டுள்ளது. இதனால் இயந்திரங்களின் அதிகப்படியான தேய்வு நைவுகள் தவிர்க்கப்பட்டு, நிலையாக உயர்ந்தரகத் தேயிலைத் தூள் உற்பத்தி செய்ய ஏதுவாகிறது. இதில் கோத்தகிரி தேயிலைத் தோட்டத்தில் ரூ.2 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் 'குயின்சோலை' தேயிலைத் தொழிற்சாலை 7.5 இலட்சம் கிலோ ஆண்டு உற்பத்தித் திறன் கொண்டது, இந்த ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில் உற்பத்தியை ஆரம்பிக்கும் தறுவாயில் உள்ளது. மற்றொன்று நெல்லியாளம் தேயிலைக் கோட்டத்தில் ரூ.4 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் 'நெல்லியாளம் தேயிலைத் தொழிற்சாலை' 15 இலட்சம் கிலோ ஆண்டு உற்பத்தித் திறன் கொண்டது, இந்த ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் உற்பத்தியை ஆரம்பிக்கும் தறுவாயில் உள்ளது. மேலும், ஆனைமலைப் பகுதியில் ஏற்கெனவே செயலற்றுப்போன கொய்னா தொழிற்சாலையை ரூ.15 கோடி செலவில் 10 இலட்சம் கிலோ ஆண்டு உற்பத்தித் திறன் கொண்ட தொழிற்சாலையாக மாற்றத் திட்டமிட்டுள்ளது. இதில் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

1991-92-ஆம் ஆண்டில் இக்கழகம் மொத்தம் 60.65 இலட்சம் கிலோ தேயிலைத் தூள் உற்பத்தி செய்துள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் 64.19 இலட்சம் கிலோ தேயிலைத் தூள் உற்பத்தி செய்துள்ளது. 1993-94-ஆம் ஆண்டில் அதாவது ஏப்ரல் 93 முதல் ஆகஸ்டு 93 வரை இக்கழகம் மொத்தம் 25.53 இலட்சம் கிலோ தேயிலைத் தூள் உற்பத்தி செய்துள்ளது.

**விற்பனை**

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம் தனது தேயிலைத் தூளை மொத்தமாக வாரக் கணக்கில் கொச்சி, கோயமுத்தூர் மற்றும் குன்னூர் ஆகிய ஏல மையங்களில் விற்று வருகிறது. அண்மையில் இக்கழகம் தனது சில்லறை விற்பனையைப் பெருக்கும் பொருட்டு தேயிலைத் தூளைக் கவர்ச்சியான பாக்கெட்டுகளில் நிரப்பிக் கூட்டுறவுச் சிறப்பங்காடிகளில் மற்றும் மத்திய மாநில அரசு நிறுவனங்கள் மூலமாக விற்று வருகின்றன. இக்கழகம், ஒவ்வொரு ஆண்டும் டெல்லியில் நடைபெறும் சர்வதேச வியாபாரச் சந்தை மற்றும் சென்னையில் நடைபெறும் உல்லாசப் பயணிகள் வியாபாரச் சந்தையில் பங்கேற்று தனது உற்பத்தி பொருட்களை விற்பது ஒரு சிறப்பு அம்சமாகும். இதில் விற்பனையாகும் பொருட்கள், தேயிலைத் தூள் தவிர மற்றும் ஏலக்காய், குறுமிளகு, கற்பூரத் தைலம், சின்பிரஷ் ஆகியவையும் ஆகும்.

1991-92-ஆம் ஆண்டில் இக்கழகம் 24,420 கிலோ ஆர்தோடக்ஸ் தேயிலையை இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு நேரடி ஏற்றுமதி செய்து ரூ.11.15 இலட்சம் அந்நியச் செலாவணி ஈட்டியுள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் இக்கழகம் 3,62,087 கிலோ ஆர்தோடக்ஸ் மற்றும் சி.டி.சி. தேயிலையை இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, பெல்ஜியம் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து ரூ.160.61 இலட்சம் அந்நியச் செலாவணியாக ஈட்டியுள்ளது. 1993-94-ஆம் ஆண்டில் அதாவது ஏப்ரல் 93 முதல் ஆகஸ்டு 93 வரை 65,000 கிலோ தேயிலைத் தூளை நேரடி ஏற்றுமதி செய்து ரூ.34 இலட்சம்

## மீனவர் குடும்பங்களுக்கு மாண்புமிகு முதல்வர் உதவி!

தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே உள்ள ஆழ்கடல் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டு மீனவர்கள் திரு. பாண்டி, திரு. சங்கர், திரு. ராமமூர்த்தி மற்றும் திரு. பழனிசாமி ஆகிய நான்கு பேரும் 8.10.1993 அன்று இலங்கைக் கப்பற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டினால் இறந்து போனார்கள். இந்தத் துயரச் சம்பவத்தில் இறந்து போன நான்கு மீனவர்களின் குடும்பத்தாருக்கு உடனடியாக நிதி உதவி அளிக்க வேண்டும் என மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டிருந்தார். இறந்துபோனவர்களில் திரு. பாண்டி என்பவரின் குடும்பத்தாருக்குத் தேசிய மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் இணையத்தின் மூலமாகக் காப்பீட்டு நிவாரணத் தொகையாக ரூ.25,000 கிடைக்கும். ஏனைய மூன்று மீனவர்கள், தேசிய மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் இணையத்தில் உறுப்பினர்களாக இல்லாத காரணத்தால், அவர்களின் குடும்பத்தாருக்குக் காப்பீட்டு உதவித் தொகை ஏதும் கிடைக்காது என்ற சூழ்நிலையில், அந்தக் குடும்பங்கள் வறுமையில் வாடக்கூடாது என்பதற்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இறந்துபோன மீனவர்களான திரு. சங்கர், திரு. ராமமூர்த்தி, திரு. பழனிசாமி ஆகியோரின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 10,000 ரூபாய் நிதி உதவி வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்.

---

அந்நியச் செலாவணி ஈட்டியுள்ளது. ஏற்றுமதி விற்பனையின் சராசரி விலையாகிய ரூ.52.31 (ஒரு கிலோவிற்கு) ஏலமையங்களில் விற்பதை விட ரூ.10 ஒரு கிலோவிற்கு அதிகமாகவே உள்ளது.

### காப்பித் தொழில்

தேயிலைத் தொழிலுக்குப் பிறகு காப்பித் தொழிலில் இம்மாவட்டம் சிறந்து விளங்குகிறது. சுமார் 9,000 எக்டேர்களில் காப்பி பயிரிடப்படுகிறது. இம்மாவட்டத்தின் மொத்த காப்பி உற்பத்தியில் 50 சதவிகிதம் கூடலூர் வட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. இத்தொழிலின் மூலம் 15,000 பேர் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

### நீலகிரி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்

இம்மாவட்டத்தில் பால் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 13,200 லிட்டர் மட்டுமே கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து வருகிறது. இப்பொழுது நிலை மாறி தற்பொழுது நாளொன்றுக்குச் சுமார் 32,000 லிட்டர் பால் இவ்வொன்றியம் பெற்று வருகிறது. இதில் உள்ளூர் விற்பனை அளவான 26,000 லிட்டர் போக மீதி பால் வெளி மாவட்டங்களிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு அனுப்பப்படுகிறது. நுண்ணிய பால் பண்ணைகள் அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றி, இம்மாவட்டத்தில் புதிதாக 250 நுண்ணிய பால் பண்ணைகள் அமைக்கும் துரிதமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்சமயம் 72 நுண்ணிய பால்பண்ணைகள் அமைக்கப்பட்டு விட்டது. கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிலகம் பாலோடு, வெண்ணெய், நெய், ஐஸ்கிரீம் போன்ற உறை பொருள்களைத் தயாரிக்கிறது. சுமார் 600 நபர்கள் நேரடியாகவும் 32,000 பேர் பகுதி நேரமாகவும் இத்தொழிலகத்தின் மூலம் வேலை வாய்ப்பும் பெற்றுள்ளனர்.

### மாவட்டத் தொழில் மையம்

இம்மாவட்டத்தில் 31.8.93 அன்று வரை 1846 சிறு தொழில் நிறுவனங்கள் செயல்படுகின்றன. இச்சிறு தொழில் நிறுவனங்கள் மூலம் 8,925 பேர் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

### கைவினைத் தொழில்கள்

கைவினைப் பொருட்கள் செய்யும் நிறுவனங்கள் இனம் கண்டு பதிவு செய்யப்படுகின்றன. 31.8.93 வரை 1,205 கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்தொழில் நிறுவனங்களின் மூலம் 1,406 நபர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

### குடிசைத் தொழில்கள்

குடிசைத் தொழில் நிறுவனங்கள் இனம் கண்டு பதிவு செய்யப்படுகின்றன. 31.8.93 வரை 845 குடிசைத் தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்தொழில் நிறுவனங்களின் மூலம் 987 நபர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

கூடலூர் வட்டம் தொழிலில் பின் தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டு மின் மானியம் வட்டியில்லா விற்பனை வரி கடன், மாநில மூலதன மானியம் ஆகிய சலுகைகளை பெற இவ்வட்டம் தகுதி பெற்றுள்ளது.

### தொழிற்பேட்டை

சிறுதொழில் நிறுவனங்களுக்குத் தொழிலகம் அமைக்கத் தொழிற்கூடம் ஒதுக்கும் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு நமது அரசு உதகையில் இந்துஸ்தான் புகைப்படத் தொழிற்சாலையின் அருகே ஒரு தொழிற்பேட்டை நிறுவியுள்ளது. இத்தொழிற்பேட்டை கோவை சிறுதொழில் முன்னேற்றக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. இத்தொழிற்பேட்டையில் 10 பெரிய தொழிற் கூடங்களும் 10 சிறிய தொழிற் கூடங்களும் இயங்குகிறது. இன்ஜினியரிங், பிளாஸ்டிக், எஃகு மற்றும் மரத்தினால் செய்யப்படும் பொருட்கள், அட்டைப் பெட்டிகள் தயாரித்தல் போன்ற தொழில் இங்கு இயங்குகின்றன.

மலைகளின் ராணியான நீலகிரி மாவட்டத்தின் வளமான வாழ்வுக்கு வழிகோலும் மத்திய மாநில அரசுகளின் திட்டங்களை முனைப்போடு பயன்படுத்தி, நித்தம் நித்தம் வளரும் மாவட்டமாக நீலகிரி மாவட்டம் மாறி வருகிறது. இந்த நல்ல சூழ்நிலையில் மாண்புமிகு தமிழக முதல்வரின் கருத்திற்கேற்ப, நாடெங்கிலும் உள்ள தொழில் முனைவோர்களுக்கு இப்பகுதி வாழ் மக்களுக்கு ஏற்ற வகையிலும், சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த நிலையிலும் தொழில் தொடங்க வர வேற்புக் கூற காத்து நிற்கிறது நீலகிரி மாவட்டம்.



# தமிழக முதல்வரின் மனிதாபிமானத் திட்டங்களை, அன்னை தெரசா நேரில் வாழ்த்தினார்

அமைதியின் மகத்தான தூதரும், நோபல் பரிசு பெற்றவருமான அன்னை தெரசா அவர்கள், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, முதல்வர் அவர்களின் இல்லத்தில், 20.1.1994 அன்று பகல் 12 மணிக்குச் சந்தித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவோடும் மரியாதையுடனும் அன்னை தெரசா அவர்களை வரவேற்று, அவருடன் தனியே 30 நிமிடங்கள் உரையாடினார்.

மாண்புமிகு முதல்வர் தலைமையில் தமிழகத்தில், பெண் குழந்தைகள், பெண்கள், ஆதரவற்றோர், முதியோர் ஆகியோரது நலனுக்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை அன்னை தெரசா அவர்கள் மனதாரப் பாராட்டினார்.

அன்னை தெரசா அவர்கள், குறிப்பாக, இம்மாநிலப் பெண் குழந்தைகளுக்கு வரப்பிரசாதமாக விளங்கும் தொட்டில் குழந்தைத் திட்டத்தை அறிந்து மிகவும் மகிழ்ந்தார். இத்திட்டத்தின் வெற்றிக்காகத் தான் பிரார்த்தனை செய்யப் போவதாகவும் கூறினார்.

''மிஷனரிஸ் ஆஃப் சேரிட்டி' (Missionaries of Charity) நிறுவனம் வீட்டு வசதி வாரியம் ஒதுக்கித் தந்த மனையின் மீது கட்டப்பட்ட வீட்டில் குத்தகைக்கு இருப்பதாகவும், அந்த நிலத்தை அவர்களுக்கே தமிழக அரசு இலவசமாக வழங்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். அன்னை தெரசா அவர்களின் இந்த வேண்டுகோளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனே ஏற்றுக் கொண்டார்.

இந்த ''மிஷனரிஸ் ஆஃப் சேரிட்டி' (Missionaries of Charity) நிறுவனம் உபயோகப்படுத்தும் ஆம்புலன்ஸ் போன்ற வாகனங்களுக்கு நுழைவு வரி, வாகன வரி ஆகியவற்றிலிருந்து விலக்களிக்க வேண்டுமெனவும் அன்னை தெரசா அவர்கள் கேட்டுக் கொண்டார். இக்கோரிக்கையைத் தீவிரமாகப் பரிசீலிப்பதாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதியளித்தார்.

அகில உலகப் பெண்கள் தினமான 9.3.1994 அன்று, தமிழ்நாடு அரசு நடத்தவுள்ள விழாவிற்குத் தலைமை விருந்தினராக அன்னை தெரசா வருகை தந்து சிறப்பிக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். முதல்வரின் இந்த அழைப்பினை அன்னை தெரசா அவர்கள் உடனே ஏற்றுக் கொண்டார்.

ஏழைக் குழந்தைகள், குறிப்பாகப் பெண் குழந்தைகள், ஆதரவற்றோர், முதியோர் ஆகியோர் நலனுக்காகத் தமிழக அரசு எடுத்துவரும் மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்து அன்னை தெரசா அவர்கள் மிகவும் மகிழ்ந்தார்.

தானும், முதல்வர் அவர்களும் ஒரே நோக்கத்திற்காக உழைத்து வருவதாகவும், ஒரே உன்னதமான இலக்கினை அடைந்து வருவதாகவும், முதல்வரின் அனைத்து முயற்சிகளுக்கும் தன் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும் அன்னை தெரசா அவர்கள் கூறினார். அத்துடன் முதல்வருக்காகத் தாம் தினமும் பிரார்த்தனை செய்யப் போவதாகவும் அன்னை தெரசா கூறினார்.

## சிறுசேமிப்பு - குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# சிறுசேமிப்புத்துறையின் மகத்தான பரிசுத்திட்டம்




இன்றே ரூ.500/-ம் அதற்கு மேலும் தமிழ்நாட்டில் முதலீடு செய்து இலவச பரிசுக் கூப்பன் பெறுங்கள்.

## உங்கள் முதலீடுகளுக்கு 619 கவர்ச்சிகரமான பரிசுகள்

1 சூப்பர் பம்பர் முதல் பரிசு மாருதி ஆம்னிவேன் (அல்லது) 25 h.p.H.M.T. டிராக்டர்(இயந்திரக்கலப்பையுடன்)
1 இரண்டாவது பரிசு - அஞ்சலக மாதாந்திர வருவாய்த்திட்டத்தில் ரூ.24,000/-க்கான முதலீடு
2 மூன்றாவது பரிசுகள் - கலர் டெலிவிஷன்
2 நான்காவது பரிசுகள் - உலர்த்தும் வசதியுள்ள செமிஆட்டோமேடிக் வாஷிங்மெஷின்
3 ஐந்தாவது பரிசுகள் - 2 நபர்களுக்கு சென்னையிலிருந்து புறப்படும் 6 நாள் தென்னிந்திய சுற்றுலா
10 ஆறாவது பரிசுகள் - 1 சவரன் (22 காரட்) தங்கநாணயம்
600 ஏழாவது பரிசுகள் - ரூ.100/- மதிப்புள்ள இந்திராவிகாஸ் பத்திரம்

## பரிசுக் கூப்பன் பெற முதலீடு செய்ய வேண்டிய திட்டங்கள்

- இந்திரா விகாஸ் பத்திரம் (IVP)
- கிசான் விகாஸ் பத்திரம் (KVP)
- தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு (NSCVIII ISSUE )
- தேசிய சேமிப்புத்திட்டம் 1992 (NSS '92)
- 15 ஆண்டு பொது சேமநல நிதித்திட்டம் (PPF)
- மாதாந்திர வருவாய்த் திட்டம் (MIS)
- ஓய்வு பெறும் அரசு/பொது நிறுவன ஊழியர்களுக்கான சேமிப்புத் திட்டம்
  1 மற்றும் 2 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D) 1% ஊக்கத்தொகை
- 3 மற்றும் 5 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D)
  அஞ்சலகத் தொடர் வைப்புத்திட்டம் / வளரும் மாத சேமிப்புத் திட்டம் (R.D./C.T.D.)

மேலும் 2% ஊக்கத்தொகை (குறிப்பிட்ட திட்டத்திற்கு)

## சேமிப்புப்பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விவரங்களுக்கு:
ஆணையர், சென்னை மாநகராட்சி, (சி. சே. பிரிவு) சென்னை - 600 003.
தொலைபேசி: 584440
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், 92, அண்ணா சாலை, சென்னை 600 002. தொலைபேசி: 849962.
மாவட்ட ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்

வெளியீடு: இயக்குநர்,
சிறுசேமிப்புத்துறை, 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006. தொலைபேசி : 8251784/8251685
சிறு குடும்பம் - செல்வக்குடும்பம்

DIPR/664/DIS/93

## இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

1.1.1995-க்கு முன்பு நாட்டிலுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் புகைப்பட அடையாள அட்டை வழங்க வேண்டுமென இந்தியத் தேர்தல் ஆணையம் அனுப்பியுள்ள தாக்கீதினால் ஏற்பட்ட பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க, மாநில முதலமைச்சர்கள் கூட்டத்தை மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் கூட்டியிருப்பதறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். இது போன்றதொரு மாநாட்டில் இப்பிரச்சினை குறித்து, விரிவாக விவாதிக்க வேண்டும் என்ற மாண்புமிகு மேற்கு வங்காள முதலமைச்சர், மாண்புமிகு ஒரிசா முதலமைச்சர் மற்றும் சில மாநில முதலமைச்சர்களின் வேண்டு கோளை மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டது குறித்தும் நான் மகிழ்ச்சியடைகிறேன்.



இந்தியத் தேர்தல் ஆணையத்தின் இந்தத் தாக்கத்தினால் உருவாகியுள்ள பிரச்சினைகள், இந்தியாவில் தேர்தல் நடைமுறைகள் மீது மிகுந்த பாதிப்பை உண்டாக்கும்.

# "வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை: முதலில் சோதனை முறையில் அமல்படுத்தப்பட வேண்டும்"

## — மாண்புமிகு முதல்வர்

பதிவு செய்த ஒவ்வொரு வாக்காளர்களுக்கும் பாராளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களில் வாக்களிக்க உரிமை உண்டு. பதிவு செய்த ஒவ்வொரு வாக்காளரும் இந்த உரிமையைப் பயன்படுத்துவதை உறுதி செய்து கொள்ளுவது நிறுவன ரீதியாகப் பல ஆண்டுகளாக வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளன. இந்த நிறுவன ஏற்பாடுகள் இந்திய வாக்காளர்களுக்கு மிகவும் பரிச்சயமானது. அதனால் மக்களாட்சியும் இயங்கி வருகிறது. இந்த முறையில் உள்ள தவறுகளை நான் அறியாமல் இல்லை. இந்தத் தவறுகளைக் களைவதில் நான் மிகுந்த ஆர்வமுடன் உள்ளேன். அனைத்து அரசியல் கட்சிகளும் இறுதியாக உண்மையான வாக்காளரை அடையாளம் காட்டி, அவர் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்த முழுச் சந்தர்ப்பத்தை வழங்குகின்ற ஒரு ஏற்பாட்டிற்கு வந்தாக வேண்டும்.

இத்தகைய கண்ணோட்டத்துடன் நடைமுறையில் சில மாற்றங்களைக் கொண்டுவந்தால் தீமைகளைக் களைய முடியுமெனில், அதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

இத்தகைய எண்ணத்துடன் தான் புகைப்பட அடையாள அட்டை முறையை அறிமுகப்படுத்த இந்தியத் தேர்தல் ஆணையம் வழி வகை செய்து உள்ளது என்று நான் நம்புகிறேன். தேர்தல் ஆணையத்தின் தாக்கீதிற்கு அடிப்படையாக உள்ள கொள்கை பாராட்டிற்குரியது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அதை எப்படிச் செயல்படுத்தவது என்பதுதான் முக்கியப் பிரச்சினையாகும்.

நமக்குத் தரப்பட்டுள்ள குறிப்புகள், இப்பிரச்சினையின் மகத்துவத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றன. அவை சட்டச் சிக்கல்களையும் நடைமுறையில் உள்ள இடர்ப்பாடுகளையும் குறிப்பிட்டுக்காட்டுகின்றன. இப்புதிய முறையை

# ஊனமுற்றோர்க்கு இலவச பஸ் பாஸ்

தமிழக அரசு தற்போது கண் பார்வை அற்றவர்கள் அனைத்து இடங்களுக்கும் தமிழக அரசின் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் சென்று வருவதற்கும், உதவியாளர் ஒருவர் துணையுடன் மன வளர்ச்சி குன்றியவர்களும், 20 வயதுக்குட்பட்ட உடல் ஊனமுற்றவர்கள் மற்றும் காது கேளாதோர் ஆகியோருக்கும் பள்ளிக்கூடம், பயிற்சி நிலையம் மற்றும் கல்லூரிக்கு, அவர்களது இருப்பிடத்தில் இருந்து சென்று திரும்பி வர, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் இலவசப் பயணச் சலுகை வழங்கப்பட்டு வருகின்றது.

20 வயதுக்கு மேற்பட்ட ஊனமுற்றவர்களில் அத்தியாவசியம் நிறைந்த சில குறிப்பிட்ட வகையினருக்கு மட்டும் 50 சதவிகிதக் கட்டணச் சலுகை அடிப்படையில் பஸ் பாஸ் வழங்க வேண்டும் என மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இந்தச் சலுகை, ஆண்டு வருமானம் 12,000 ரூபாய்கள் இருக்கும் ஊனமுற்றோருக்கு மட்டும் வழங்கப்படும். மாதம் ஒன்றுக்கு 46 தடவைகள் (போகவும், வரவும்) 30 கிலோமீட்டர் தூரத்திற்குள் பயணம் செய்யும் போது மட்டும் இந்த 50 சதவீத கட்டணச் சலுகை இவர்களுக்கு வழங்கப்படும்.

---

அமல்படுத்துவதனால் மிகுந்த முதலீட்டையும், மிகப்பெரிய தொடர் செலவினத்தையும் நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். இதனால் ஏற்படும் செலவினங்கள், இதனால் விளையும் நன்மைகளுக்குச் சமமாகும் என்று நாம் கணக்கிட்டாலும் கூட, நம்முன் உள்ள கேள்வி: இவ்வளவு பெரிய செலவினத்தை நம் நாடு ஏற்க இயலுமா? எப்படியாயினும் இந்தச் செலவை செய்தே தீருவது என்று நாம் முடிவு செய்தாலும், இந்த முறையில் தவறுகளே இல்லாத - குறிப்பாகத் தேர்தல் முறைகளில் வாக்காளரைச் சரியாக அடையாளம் கண்டு கொள்வதில் உள்ள குறைபாடுகளை முற்றிலுமாகக் களைந்து-சூழ்நிலையை நாம் உருவாக்க முடியுமா? இந்தத் தாக்கீதை அமல்படுத்துவதில் உள்ள சட்டச் சிக்கல்களையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.. சட்டச் சிக்கல்களுக்கும் மேலாக உள்ள, பதிவு செய்த வாக்காளர்களையும் புகைப்படம் எடுக்கும் பிரச்சினை, வாக்காளர் பட்டியலுடன் அதை ஒப்பிட்டுப் பார்த்தால், நகல்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதை உறுதி செய்தல், வாக்காளர்கள் வீடு மாறும்போது ஏற்படும் பிரச்சினைகளைக் கையாளுவது முதலியன உண்மையிலேயே கடினமான பிரச்சினையாயிருக்குமோ என அஞ்சுகிறேன்.

இச்சூழ்நிலையில் புகைப்பட அடையாள அட்டை வழங்குவதில் எதுவரை செல்லலாம் என்று முதலில் முடிவு செய்ய வேண்டும். பதிவு செய்த வாக்காளர்களின் பல தேவைகளைப் பூர்த்தி செய்யப் பலநோக்குப் புகைப்பட அடையாள அட்டையை வழங்க வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன். ஆனால், அத்தகைய திட்டம், சட்டத்திற்குப் புறம்பாக நகல்கள் எடுக்கப்படுவதை முழுமையாக ஒடுக்கும் வகையில் அமைய வேண்டும். சட்டத்திற்குப் புறம்பாக நகல்களை எடுப்பதற்குரிய சாத்தியக் கூறுகளே இத்திட்டத்திற்கு மிகப்பெரிய எதிரி ஆகும் என நான் நம்புகிறேன்.

ஆகவே, இத்திட்டத்தை நாடு முழுவதற்கும் அமல்படுத்துவது பற்றிய முடிவை எடுப்பதற்கு முன்பு ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில சட்டமன்ற, பாராளுமன்றத் தொகுதிகளில் பரிட்சார்த்த முறையில் சோதிக்கப்பட வேண்டும், என்று நான் விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர்கள் கூடியுள்ள இம் மாமன்றம் அவசரப்பட்டு ஒரு முடிவை எடுத்து விடக்கூடாது என்றே நான் விழைகிறேன்.

எனினும், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தாக்கீதை அப்படியே ஏற்றுக்கொள்வது என்ற முடிவை நாம் எடுப்போமேயானால், குறுகிய காலத்தில் இச்செலவை மாநில அரசுகள் ஏற்பதென்பது முடியாத காரியமாதலால், முழுச் செலவையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறேன். அது இயலாத பட்சத்தில் இதற்காகும் செலவில் 90 சதவிகிதத்தை மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு மானியமாகவும் 10 சதவிகிதத் தொகையைக் கடனாகவும் வழங்க வேண்டுமென மாண்புமிகு மேற்கு வங்காள முதல்வர் செய்த பரிந்துரையை நான் வழிமொழிகிறேன்.

மத்திய அரசு, இது குறித்து இந்தியத் தேர்தல் ஆணையத்துடன் விவாதித்து இத்திட்டத்தைச் சோதனைத் திட்டமாக ஏற்றுக் கொள்ள வற்புறுத்த வேண்டுமென நான் கருதுகிறேன். நன்றி.

**(19.1.1994 - அன்று டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் விநியோகிக்கப்பட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை).**




# அனைத்து அரசுப் பள்ளிக் கூடங்களிலும் "அறிவியல் வளாகம்" அமைப்பதற்குத் திட்டம்

## ஜவகர்லால் நேரு தேசிய அறிவியல் கண்காட்சி:

### தமிழக முதல்வர் தலைமையில் அர்ஜூன்சிங் திறந்துவைத்தார்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் குழந்தைகளுக்கான 21-வது ஜவகர்லால் நேரு தேசிய அறிவியல் கண்காட்சியை, மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் திரு அர்ஜூன் சிங் அவர்கள் 19.1.94 அன்று திறந்துவைத்தார்.

இந்தக் கண்காட்சி சேத்துப்பட்டிலுள்ள, சென்னை கிறிஸ்துவக் கல்லூரி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது. தொடர்ந்து எட்டு நாட்களுக்கு நடைபெற்ற இந்தக் கண்காட்சியில் இந்தியாவிலுள்ள 300-க்கும் மேற்பட்ட பள்ளிகளின் அறிவியல் காட்சிப் பொருட்கள் இடம்பெற்றன.

**மலர் தூவி வரவேற்பு**

விழாவிற்கு வந்த முதல்வர் அவர்களையும், மத்திய அமைச்சரையும் வரவேற்க ஹாரிங்டன் சாலை பள்ளி வாயிலிலிருந்து விழா அரங்கம் வரை இருபுறமும் வண்ண வண்ண உடைகள் அணிந்த மாணவிகள் வரிசையாக நின்று மலர் தூவி வரவேற்றனர்.

அறிவியலைக் குறிக்கும் வகையில் கம்ப்யூட்டர் இயந்திர மனிதர்களைப் போல உடையணிந்த பெண்கள், விழா அரங்கம் அருகே இருபுறமும் நின்று முதல்வர் அவர்களை வரவேற்றனர். விழாவில் பங்கேற்க மத்திய அமைச்சர் திரு அர்ஜூன் சிங் தமது துணைவியாருடன் வந்திருந்தார்.

விழாவின் துவக்கத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் கே. பொன்னுசாமி அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

தேசியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் ஏ.கே. சர்மா, கண்காட்சி பற்றிய அறிக்கையைப் படித்தார். தலைமைச்

செயலர் திரு. டி.வி.வெங்கட்ராமன் அவர்கள் வாழ்த்துரை வழங்கியதற்குப் பிறகு மத்திய அமைச்சர் திரு அர்ஜூன் சிங் மேடையிலிருந்த பொத்தானை அமுக்கிக் கண்காட்சி பற்றிய பலகையைத் திறந்துவைத்தார்.

விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். விழாவில் கல்வித்துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி மத்திய அமைச்சருக்கும், முதல்வருக்கும் மத்திய அமைச்சரின் துணைவியாருக்கும் சால்வை போர்த்தினார். பள்ளித் தலைமையாசிரியரும், சால்வை வழங்கினார்.

**நினைவுப் பரிசு**

மாண்புமிகு மத்திய அமைச்சருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்தினார். வெங்கடாசலபதி படம் நடுவில் இருக்க, இருபுறமும் குத்து விளக்குகள் கொண்ட வெள்ளியால் ஆன நினைவுச் சின்னத்தையும் வழங்கினார்.

திருமதி அர்ஜூன் சிங்கிற்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பொன்னாடை போர்த்தினார். கல்வித் துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி, மாண்புமிகு முதல்வருக்கும், மாண்புமிகு மத்திய அமைச்சருக்கும் விஞ்ஞானக் கோள் அமைந்த பரிசை வழங்கினார். விழாவுரையில் மத்திய மனித வள அமைச்சர் பேசுகையில் நம் முதல்வரைப் பாராட்டினார்.

அறிவியல் துறை முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் தமிழக முதல்வர் இந்தக் கண்காட்சியை நடத்த ஏற்பாடு செய்ததற்காகவும், நிகழ்ச்சிக்கு வருகை தந்தமைக்காகவும் பாராட்டினார்.

கண்காட்சியை மாண்புமிகு மத்திய அமைச்சரும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் சுற்றிப் பார்த்தார்கள். விழாவிற்கு மாண்புமிகு தமிழக அமைச்சர்கள், வாரியத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பலர் வந்திருந்தனர்.



சிறுவர்களுக்கான, 21-வது ஜவகர்லால் நேரு தேசிய அறிவியல் கண்காட்சித் தொடக்க விழாவுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமை தாங்கிப் பேசியதாவது:-

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேருவின் பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் ஒவ்வொரு ஆண்டும், ஒரு மாநிலத்தில் சிறுவர்களுக்கான அறிவியல் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில், தமிழ் நாட்டில் - அதுவும் சென்னை நகரில் அறிவியல் கண்காட்சி நடத்தப்படுவது பாராட்டுக்குரியது.

நேரு, குழந்தைகளிடம் மிகுந்த அன்பு காட்டியவர், இந்தியாவின் எதிர்காலம் குழந்தைகளிடம்தான் இருக்கிறது என்று நேரு நம்பினார்.

**நேரு ஒரு விஞ்ஞானி**

சிறுவர்கள் சரியான ஆரோக்கியமான முறையில் அறிவாளிகளாகவும், சுதந்திரமாகவும் வளர்க்கப்பட வேண்டுமென்று நேரு விரும்பினார். அப்போதுதான் நம் நாடும் சிறப்பாக விளங்குமென்று நேரு கருதினார். நேரு உண்மையிலேயே ஒரு விஞ்ஞானி.

அறிவியல் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தார் அவர். விஞ்ஞானமும், தொழில் நுட்பமும், உலகத்தை ஒவ்வொரு நாளும் மாற்றி வருகின்றன. அவை நம்முடைய சிந்தனையிலும், அணுகுமுறையிலும், தோற்றத்திலும், செல்வ வளத்திலும், சமூக வாழ்க்கையிலும் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்றன. விஞ்ஞானத்துக்கு வெளியே வாழ்வதென்பது முடியாத ஒன்று.

மேலை நாடுகள் முன்னேறியிருப்பதற்கும், செல்வச் செழிப்புடனிருப்பதற்கும் விஞ்ஞான

வளர்ச்சி ஒரு காரணமாகும். அதுமட்டுமல்லாமல் விஞ்ஞானச் சிந்தனையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

எனவே, நமது குழந்தைகள் விஞ்ஞானத்தில் வளர்ச்சியடைய வேண்டும். விஞ்ஞானத்தில் அதிக ஈடுபாடு காட்டும்போதுதான் அது நம்மை ஈர்க்கிறது. விஞ்ஞானம், வாழ்க்கையில் ஒரு இலட்சியத்தையும், அணுகுமுறையையும் தருவ தோடு மகிழ்வையும் அளிக்கிறது.

**கண்டுபிடியுங்கள்**

மனிதாபிமானத்தையும் விஞ்ஞானம் வளர்க் கிறது. மற்ற மனிதர்களுக்காக அக்கறை காட்டும் குணத்தையும் அது வளர்க்கிறது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் பற்றித் தெரிந்துகொள்ள ஆவல்வேண்டும்.

சாதாரண சின்னக் கருவிகூட மிகப் பெரிய கண்டுபிடிப்புகளுக்குக் காரணமாகயிருக்கிறது. இதனால்தான் இதுபோன்ற அறிவியல் கண் காட்சிகளுக்கு மதிப்பும், மரியாதையும் இருக் கிறது. இளைஞர்களுக்குப் பரிசோதனைகள் பற் றிய அறிமுகத்தைக் கொடுக்க வாய்ப்பளிக்கின் றன. ஒரு கவிதை எழுதும்போதும் ஒரு புதிரை விடுவிக்கும்போதும் எப்படித் திருப்தி கிடைக் கிறதோ, அது போன்ற திருப்தி விஞ்ஞானப் பரிசோதனைகளில் ஈடுபடும்போது கிடைக்கிறது.

விஞ்ஞானத்தைச் சில படித்தவர்கள் மட்டும் புரிந்துகொண்டு அதன்படி நடப்பதென்பது மட்டும் போதாது. மனிதப் பிரச்சினைகள், நல் வாழ்வுப் பிரச்சினைகள் வறுமைப் பிரச்சினைகள் ஆகியவற்றைத் தீர்ப்பதற்கும், விஞ்ஞானம் பயன்பட வேண்டும்.

மக்களை ஒன்றுசேர்க்க விஞ்ஞானம் பயன் படுத்தப்பட வேண்டுமென்ற எண்ணத்திற்கு மிகப் பெரிய ஆதரவிருந்து வருகிறது.

வளர்ந்த நாடுகளும், ஏழை நாடுகளும் ஒன் றாகச் சேர வேண்டும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை வளர்ந்த நாடுகள் காட்ட வேண்டும். ஏழை நாடுகள் தங்களிடம் இருக்கிற மனித வளம் மூலம் முன்னேறக் கற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் பள்ளிக் கூடங்களுக்கான விஞ்ஞானக் கல்வி வளர்ச்சியில் நாம் பல சாதனைகள் புரிந்திருக்கிறோம். விஞ்ஞானப் போதனையை நாம் பலப்படுத்தியிருக்கிறோம்.

சென்னையில் அறிவியல் நகரம் அமைப்பதன் மூலம் விஞ்ஞானப் போதனையை வலுப்படுத்தி இருக்கிறோம். அது தவிர மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் வட்டார அறிவியல் மையங்கள் அமைத்து வருகிறோம்.

**அறிவியல் வளாகம்**

அனைத்து அரசுப் பள்ளிக் கூடங்களிலும் அறிவியல் வளாகம் அமைப்பதற்குத் திட்ட மிட்டிருக்கிறோம்.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் வசதிக்காகப் பரி சோதனைக் கூடங்களையும், நூலகங்களையும் அரசாங்கம் வழங்கியிருக்கிறது.

சென்னைத் தரமணியில் அறிவியல் நகரம் அமைக்கத் திட்டமிட்டிருக்கிறோம். இது விஞ் ஞானச் சூழலுக்கும், விஞ்ஞான வளர்ச்சிக்கும் வழிவகை செய்யும்.

ஏற்கெனவே சென்னையில் அறிவியல் மையத்தையும், அறிவியல் கண்காட்சிக் கூடத்தை யும், கோளரங்கத்தையும் அமைத்திருக்கிறோம். அறிவியல் கண்காட்சி மையத்தை உலக நாடுகள் உதவியோடு, விரிவுபடுத்தவும் திட்டமிட்டிருக் கிறோம். விஞ்ஞானம் எல்லாக் குழந்தைகளையும் எல்லா மக்களையும் எட்ட வேண்டுமென்று விரும்புகிறோம்''.

— இவ்வாறு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசினார்.

## ஊனமுற்ற இளைஞர்களுக்குத் தட்டச்சுப் பணி

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த காது கேட்க இயலாத வாய் பேச முடியாத திரு சரவணன் என்ற ஊனமுற்ற இளைஞர், தனது குடும்பத்தில் தன்னைப் போன்றே 3 சகோதரிகள் வாய் பேச இயலாமல், காது கேட்க இயலாமல் உள்ள பரிதாபமான நிலையை எடுத்துரைத்து, வறுமையில் வாடும் தனது குடும்பத்தின் துயரத் தைப் போக்கவும், தனது சகோதரிகளைப் பாது காக்கவும், தனக்கு அரசுப் பணியில் ஏதேனும் ஒரு வேலை வழங்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குக் கோரிக்கை மனு ஒன்றினை அனுப்பி வைத்திருந் தார்.

மனுதாரர் திரு சரவணன், காது கேளாதோர் பள்ளியில் இறுதித் தேர்ச்சிப் பெற்று, ஆங்கிலம் மற்றும் தமிழ்த் தட்டச்சுப் பயிற்சியில் முதுநிலை வரை தேர்ச்சி பெற்றுள்ளார் என்பதையும் அவரது 3 ஊனமுற்ற சகோதரிகளின் நலனையும் கருத்தில் கொண்டு, அவரது மனுவினை கருணை யுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மனுதாரர் திரு சரவணன் அவர்களுக்கு நியமன விதிகளைத் தளர்த்தி, தமிழக அரசு சமூக நலத் துறையில் தட்டச்சராகப் பணியில் நியமனம் செய்து ஆணை யிட்டுள்ளார்.



# வீரிய ரக நெல்லுக்கு எம்.ஜி.ஆர். பெயர்

தமிழ்நாட்டில் கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் புதிய நெல் ரகங்களையும் வீரிய ஒட்டு நெல் ரகங்களையும் கண்டுபிடித்து அதன் மூலமாக வேளாண்மைத் துறை நெல் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி வகுத்து வருகிறது. இந்தியாவில் 12 இடங்களில் இதுபோன்ற ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் 4 இடங்களில் மட்டும்தான் வீரிய ஒட்டு ரகங்கள் (Hybrid varieties) தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆந்திர மாநிலத்தில் இரண்டு வீரிய ஒட்டு ரகமும், கர்நாடகாவில் ஒரு ஒட்டு ரகமும், பஞ்சாபில் ஒரு ஒட்டு ரகமும் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருவதோடு, தனியார் ஆராய்ச்சி நிறுவனங்களும் இந்த ஒட்டு ரகங்கள் பற்றி ஆராய்ச்சி செய்து வருகின்றன.

வேளாண்மைத் துறையில் பல சாதனைகள் படைத்துள்ள தமிழ்நாட்டில் கோயம்புத்தூரில் அமைந்துள்ள ஆராய்ச்சி நிலையத்தில்தான் 1989-ஆம் ஆண்டு முதல் தீவிர ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு முதல் முறையாக வீரிய ரக ஒட்டு ரக நெல் (Hybrid varieties) ஒன்றைக் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளார்கள்.

இந்தியாவிலேயே முதல் முறையாக வெளியிடப்படும் வீரிய ஒட்டு நெல் ரகத்திற்கு 'எம்.ஜி.ஆர். நெல்' என்ற பெயரை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சூட்டி உள்ளார். பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 77-வது பிறந்த நாள் விழா ஜனவரி மாதம் 17-ஆம் தேதி கொண்டாடப்பட்டதை ஒட்டி இந்த வீரிய ஒட்டு நெல் ரகத்திற்கு 'எம்.ஜி.ஆர்.' என்று பெயரைச் சூட்டி உள்ளார்.

மற்ற வீரிய ஒட்டு ரகங்கள் 125 முதல் 135 நாள் வயது உடையதாகும். ஆனால் 'எம்.ஜி.ஆர்.' என பெயரிடப்பட்டுள்ள இந்த வீரிய ஒட்டு ரகம் குறுகிய காலமான 110 முதல் 115 நாள் வயது உடையதாகும். மேலும், மே, ஜூன் மாதங்களில் பயிரிட மிகவும் ஏற்ற நெல் ரகம் இது என ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். இந்த வீரிய ஒட்டு ரக நெல்லைப் பயிர் செய்தால் அதிகமாக மகசூல் கிடைக்கும் என்றும் தமிழ்நாட்டில் 20 இலட்சம் எக்டரில் நெல் பயிரிடப்படும் பரப்பளவில் ஒரு கணிசமான அளவுக்கு இந்த 'எம்.ஜி.ஆர். நெல்' ரகத்தைப் பயிரிட்டால் நெல் உற்பத்தி மேலும் பெருகும் என்ற கருத்தை ஆராய்ச்சியாளர்கள் மாண்புமிகு முதல்வர் முன் வைத்துள்ளார்கள்.

இந்தப் புதிய வீரிய ஒட்டு நெல் ரகம் பயிரிட்டால் விதை நெல்லின் செலவும் நடவு கூலியும் குறையும் எனக் கருத்து தெரிவிக்கப் பட்டுள்ளது. குறுகிய வயதும், சன்ன ரகமும் கொண்ட இந்த வீரிய ஒட்டு நெல் ரகம் மே, ஜூன் மாதங்களில் பயிரிடுவதற்கு ஏற்றது என்றும் ஒரு எக்டேருக்கு 63 டன் வரை நெல் மகசூல் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தங்களுடைய கடுமையான உழைப்பினாலும் தொடர்ந்த ஆராய்ச்சியினாலும் புதிய வீரிய ஒட்டு நெல் ரகத்தைக் கண்டுபிடித்த வேளாண்மை விஞ்ஞானிகளுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்தார். 'எம்.ஜி.ஆர். நெல் ரகம்' நமது வேளாண்மைத் துறையில் உற்பத்தி பெருக்கத்திற்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கையை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தெரிவித்துள்ளார்.

## விளையாட்டு வீரர்களின் உதவித்தொகை உயர்வு

**கடந்த 10.7.1993 அன்று நடைபெற்ற தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதற்கூட்டத்தில், ஆணையத்தின் தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தன்னிகரற்ற விளையாட்டு வீரர்களாக விளங்கி தற்போது வறுமை நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் விளையாட்டு வீரர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித் தொகை ரூ.75-லிருந்து ரூ.500 ஆக உயர்த்தப்படும் என அறிவித்திருந்தார்.**

**அதன் அடிப்படையில் சிறந்த விளையாட்டு வீரர்களாக விளங்கித் தற்போது வறுமை நிலையில் வாழும் விளையாட்டு வீரர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித் தொகை ரூ.75-லிருந்து ரூ.500 ஆக வழங்கிட மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார். தமிழகத்தில் உள்ள 72 விளையாட்டு வீரர்கள் இந்த அறிவிப்பினால் பயனடைவார்கள்.**



# தொகுதி மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் பேருதவி!

பின் தங்கிய மாவட்டமான தர்மபுரி மாவட்டத்தின் பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அந்தத் தொகுதி மக்களின் குறைகளைக் கேட்டு அவற்றைக் களையவேண்டும் என்பதற்காக பர்கூர் நகரில் தொகுதி அலுவலகம் ஒன்றைத் துவக்கி மனுக்களைப் பெற்று வருகிறார். அந்த அலுவலகத்தில் பெறப்படும் அனைத்து மனுக்களையும் தனது நேரடிப் பார்வையில் பரிசீலனை செய்து அரசுத் துறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய மனுக்களைப் பல்வேறு அரசுத் துறையின் பிரிவுகளுக்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்பிவைத்து அரசின் சார்பிலான உதவிகளைப் பெற்றுத் தருகிறார்.

எஞ்சியுள்ள மனுக்களில், அரசு உதவிகள் கிடைக்க இயலாத வண்ணம் உள்ள மனுக்களைத் தெரிந்தெடுத்து, அந்த மனுதாரர்களுக்கு வேண்டிய உதவிகளைத் தனது சொந்த நிதியிலிருந்து பொருட்களை வழங்கியும், நிதியாக வழங்கியும் வருகின்றார். இதுவரை 696 ஏழை எளிய நபர்களுக்கு இத்தகைய உதவிகள் பொருட்களாகவும், நிதியுதவிகளாகவும் வழங்கப்பட்டுள்ளன.

20.1.1994 அன்று, மேலும் 196 நபர்களைத் தனது இல்லத்திற்கு வரவழைத்து, தனது சொந்தச் செலவிலிருந்து, பொது நிதி உதவி கோரிய 115 நபர்களுக்கும், பெட்டிக்கடை வைக்க உதவி கோரிய 14 நபர்களுக்கும்,



காய்கறிக் கடை வைக்க உதவி கோரிய 4 நபர்களுக்கும், ஆடுகள் வளர்க்க உதவி கோரிய 19 நபர்களுக்கும், மளிகைக்கடை வைக்க உதவி கோரிய 4 நபர்களுக்கும் நிதி உதவியினை வழங்கினார்.

மேலும், வீடு கட்ட நிதி உதவி கோரிய 2 நபர்களுக்கும், திருமணம் செய்வதற்காக நிதி உதவி கோரிய 10 நபர்களுக்கும், மருத்துவ சிகிச்சைக்காக நிதி உதவி கோரிய ஒரு நபருக்கும், நிதி உதவியினை வழங்கினார். இவை மட்டுமின்றி, சைக்கிள் ரிக்ஷா கோரிய ஒரு நபருக்கு சைக்கிள் ரிக்ஷா ஒன்றினை வழங்கியும், 3 நபர்களுக்கு சைக்கிள் கடை வைக்க தலா 6 சைக்கிள்களையும், கடை நடத்தத் தேவையான உபகரணங்களையும் வழங்கினார்.

மேலும், 21 நபர்களுக்குக் கன்றுடன் கூடிய உயர்ந்த ரகக் கறவை மாடுகள் தலா ஒவ்வொன்றும், இரண்டு நபர்களுக்குத் தையல் இயந்திரங்கள் தலா ஒவ்வொன்றும் கொடுத்து உதவினார்.

இத்துடன் தனது பர்கூர் தொகுதியில் வசிக்கும் 892 ஏழைக் குடும்பங்களுக்குத் தன்னுடைய சொந்தச் செலவில் இருந்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நிதி உதவியினை வழங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## தமிழக முதலமைச்சரின் காவல் துறைப் பதக்கங்கள்

1994-ஆம் ஆண்டு 'பொங்கல்' திருநாளையொட்டி, தமிழகக் காவல் துறையைச் சேர்ந்த காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள் நிலையில் உள்ளவர்கள் 905 பேருக்குத் 'தமிழக முதலமைச்சரின் காவல் துறைப் பதக்கங்கள்' வழங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார். இதேபோல, தமிழ்நாடு தீ அணைப்புத் துறையைச் சேர்ந்த தீ அணைப்பாளர் மற்றும் முதன்மை தீ அணைப்பாளர் போன்ற நிலையில் உள்ள 78 தீ அணைப்புத் துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்குத் தமிழ்நாடு முதலமைச்சரின் 'தீ அணைப்புத் துறை பதக்கங்கள்' வழங்குவதற்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

தமிழகச் சிறைத் துறையில், நிலை-1 மற்றும் நிலை-2-ஐ சேர்ந்த 19 வார்டுகளுக்குத் 'தமிழக முதல் அமைச்சரின் சிறைத் துறை நற்பணிப் பதக்கங்கள்' வழங்க மர்ண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இந்தப் பதக்கங்களைப் பெறுபவர்களுக்கு, 1994-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல், மாதமொன்றுக்கு அவர்கள் நிலைக்கு ஏற்ப 20 ரூபாய் அல்லது 25 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படும்.



# ‘திருக்கோயில் சுற்றுலா ரயில் வண்டி’



## ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதல்வர் ஆணை

**ரா**ஜஸ்தான் மாநிலத்தில் அமைந்துள்ள சில முக்கியமான சுற்றுலாத் தலங்களை ஒரே சுற்றில் பார்வையிட்டுத்திரும்பும் வண்ணம் ‘பேலஸ் ஆன் வீல்ஸ்’ (Palace on wheels) என்ற சுற்றுலா ரயில் வண்டி இயக்கப்பட்டு வருகின்றது. தொன்மையும், பழமையும் வாய்ந்த சிறப்பு மிக்க திருக்கோயில்கள் பலவற்றைக் கொண்ட தமிழ்நாட்டில் அதே பாணியில் முக்கியமான திருக்கோயில்கள் அனைத்தையும் ஒரே சுற்றில் தரிசனம் செய்வதற்காக ‘திருக்கோயில் சுற்றுலா ரயில் வண்டி’ (Temple Tour Train) என்ற புதிய சுற்றுலா ரயில் வண்டி ஒன்றைச் செயல்படுத்த வேண்டும் என்ற கருத்தினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டிருந்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்தின் அடிப்படையில், தமிழகச் சுற்றுலாத் துறை, செயல் திட்டம் ஒன்றினை அளித்திருந்தது. அத்திட்டத்தினை ஆய்வு செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்னை எழும்பூரிலிருந்து தொடங்கி இராமேஸ்வரம் வரை சென்று இடைப்பட்ட பல இடங்களில் திருக்கோயில்கள் அமைந்துள்ள இடங்களுக்கு சுற்றுலாச் செல்லும் தமிழ்நாடு ‘திருக்கோயில் சுற்றுலா ரயில் வண்டி’ (Temple Tour Train) என்ற திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, அவற்றைச் செயல்படுத்த ஒரு கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கி உள்ளார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தென்னக ரயில்வேயின் உதவியுடன் இந்தப் புதிய சுற்றுலா ரயில் வண்டியை வாரம் ஒரு முறை இயக்கும், ஒவ்வொரு சுற்றுலாப் பயணியிடமிருந்து 5,000 ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்படும். இந்தச் சுற்றுலாப் பயணத்தின்போது சிற்றுண்டி, உணவு, இரயில் நிலையத்திலிருந்து, திருக்கோயிலுக்கு வாகன வசதி, தங்கும் இடங்கள், போன்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் செய்து தரும்.

தமிழகத்தில் திருத்தலங்களைத்தரிசிக்க பல்வேறு இடங்களிலிருந்து வரும் பக்தர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் அமைந்துள்ள இந்தத் ‘திருக்கோயில் சுற்றுலா ரயில் வண்டி’ (Temple Tour Train) விரைவில் இயக்குவதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்கப்பட வேண்டுமென மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்.

## தமிழ் மொழிக் காவலர்களுக்கான ஒய்வூதியம் உயர்வு!

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும், தமிழ் மொழியின் பெருமையைக் காக்கும் பணிகளிலும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, தமிழ் மொழிக்குச் சிறப்புச்சேர்த்த ‘தமிழ் மொழிக் காவலர்களை’ ஆண்டுதோறும் தெரிவு செய்து, அவர்களுக்கு மாதந்தோறும் 350 ரூபாயை ஒய்வூதியத் தொகையாக வழங்கி வரும் திட்டத்தினைத் தமிழக அரசு கடந்த ஆண்டு முதல் செயல் படுத்தி வருகின்றது. இத்தகைய ‘தமிழ் மொழிக் காவலர்கள்’ தங்களது முதுமைக் காலத்தில், வறுமையினால் வாடாமல் இருக்கவும், அமைதியான வாழ்க்கையை மேற்கொள்ள அடுத்தவர்களின் துணையின்றித் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் அரசு தன்னால் இயன்றவரை உதவ வேண்டும் என்று விரும்பிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், ‘தமிழ் மொழிக் காவலர்களுக்கான’ மாத ஒய்வூதியத் தொகையை 350 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ளார். இந்த ஒய்வூதிய உயர்வின் பலனைத் தற்போது ஒய்வூதியம் பெற்று வரும் 1934 ‘தமிழ் மொழிக் காவலர்கள்’ பெறுவார்கள்.

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 2.9.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE



# திருவள்ளுவர் திருநாள்

சென்னை கலைவாணர் அரங்கில் தமிழக அரசு சார்பில் 15.1.'94 அன்று திருவள்ளுவர் திருநாள் சீரும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆட்சி மொழித் திட்டக் கையேடு என்னும் நூலை வெளியிட்டார். அதன் முதல் பிரதியை முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் பெற்றுக் கொண்டார். ஆட்சிச் சொல்லகராதி கையடக்கப் பதிப்பை, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் புலவர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

**திருவள்ளுவர் விருது:**

திருக்குறள் நெறி பரப்புவதிலேயே தன் வாழ்நாளின் பெரும்பகுதியைச் செலவிட்ட அண்மையில் மறைந்த திருக்குறளார் வீ. முனிசாமி அவர்களுக்கு, திருவள்ளுவர் விருதினை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வழங்கினார். விருதினைத் திருக்குறளாரின் குமாரர் திரு. குமரகுருபரன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

**சிறந்த நூல்களுக்குப் பரிசு:**

1992-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 38 சிறந்த நூல்களுக்கு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பரிசுகள் வழங்கினார். திரு. அ. மறைமலையான் (ஒரு தமிழ்ப்பூ தவிக்கிறது) அவர்களின் நூலுக்கு முதல் பரிசும், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் புலவர் திருமதி ஆர். இந்திரகுமாரி (பாரதி கண்ட புதுமைப்பெண்) அவர்களின் நூலுக்கு இரண்டாவது பரிசும், திரு ந. இறைவன் (இந்தப் பூமியில் இளமை பூக்கும்) நூலுக்கு மூன்றாவது பரிசும் வழங்கப்பட்டது. இதே போல, பல எழுத்தாளர்களுக்கும், பரிசுகள் வழங்கப்பட்டன. நூல்களை வெளியிட்ட சிறந்த பதிப்பகங்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி:**

அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 17 பேருக்கு நிதியுதவி வழங்கப் பட்டது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு ஒப்பளிப்பு ஆணைகள் வழங்கினார். இந்த ஆண்டு நிதியுதவி பெறுபவர்களோடு சேர்த்து மொத்தம் 413 அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் நிதியுதவி பெறுகிறார்கள்.

**மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. க. பொன்னுசாமி அவர்கள் தலைமையுரை**

தமிழறிஞர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதில் புரட்சித் தலைவர் அவர்கள் பெரும் அக்கறை காட்டியிருந்தார்கள். மாபெரும் புலவர்களின் நினைவாகப் பல்வேறு மாவட்டங்களில் நினைவுத்தூண் நிறுவி பெருமை சேர்த்திருப்பதையும் அனைவரும் அறிவர். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆங்கிலப் பள்ளிகளிலும் கட்டாயமாகத் தமிழைப் பாடமாக நடத்தவேண்டும் என்று ஆணையிட்டிருந்தார்கள். திருவள்ளுவர் விருதினைத் திருக்குறள் வீ. முனிசாமி அவர்கள் பெறவிருப்பது மிகவும் பொருத்தமான ஒன்றாகும் என்பதில் ஐயமில்லை.

**முத்தமிழ்க் காவலர் வாழ்த்துரை**

திருக்குறளார் வீ. முனிசாமி அவர்களுக்குத் திருவள்ளுவர் விருது வழங்கியிருப்பது மிகவும் பாராட்டுக்கும் பெருமைக்கும் உரியது. பொங்கல் பண்டிகையையொட்டி திருவள்ளுவர் திருநாள் கொண்டாடுவதைத் தொடர்ந்து 7 நாட்கள் கொண்டாடப்பட வேண்டும்.



'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்பதற்கேற்ப, மழலைப் பள்ளி களிலும் தமிழைக் கட்டாயப் பாட மாக ஆக்கியிருப்பது குறித்து மட் டற்ற மகிழ்ச்சி. கிறிஸ்துவ மதத் திற்கும், இஸ்லாமிய மதத்திற்கும் தொடராண்டு இருப்பது போல நமக்கும் தொடராண்டு வேண்டும்.

**மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்புரை:**

திருவள்ளுவர் 2025-ஆம் ஆண்டு தொடக்க விழாவினைக் கொண்டாடுவது மிகவும் பெருமைக் கும் மகிழ்ச்சிக்கும் உரியது. நம் தமிழ்நாட்டிற்குக் குறள் பரப்பிய செம்மல் திருக்குறளார் வீ. முனி சாமி அவர்களுக்கு, திருவள்ளுவர் விருது வழங்குவது மிகப் பொருத்த மானது. சிரிக்க வைத்து- சிந்திக்க வைத்து- சித்திக்க வைத்து மக்களின் மனதில் குறளைப் பதிய வைத்து, அறிவுத்தன்மையிலும் தன்னிகரில் லாத, திருக்குறளாருக்கு இந்த விருது அளிப்பது சாலப் பொருத்தமாகும்.

பொங்கல் விழா ஒன்றுதான் தமிழனின் 'தனிவிழா'வாக இருக்க வேண்டும். அவனியில் அன்பு, அறிவு, ஆற்றல், வளம், வலிவு, செல்வம், செழிப்பு முதலியவை பொங்க வேண்டும் என்ற மகிழ்ச்சி யில்தான் இந்நாளைக் கொண்டாடு கிறோம். 'போகி' என்பதல்ல. அதற்குப் 'போக்கி' நாள் எனலாம். இந்நாளில் பழைய துணிமணிகள் உபயோகித்த பொருள்களைப் போக்கி விடுவதால் இவ்வாறு அழைக்கப்படலாம். அடுத்து மாட்டுப் பொங்கல், மாடு என்றாலே செல்வம் என்றுதான் பொருள். அடுத்து, காணும் பொங்கல். அனை வரும் குழுமியிருந்து ஒன்றாக இணைந்து கொண்டாடும் விழா. மனிதனின் கண்டுபிடிப்புகளிலேயே மிகவும் அற்புதமானது எது என்ற கேள்விக்குப் பதிலாக வருவது 'மொழி'யாகும். ஆம். மொழியை அவன் கண்டுபிடிக்காமல் விட்டி ருந்தால் மனிதன் சிந்தித்து இருக் கவும் முடியாது. எதையும் செய லாற்றவும் முடியாமல் போயிருக்கும். தேசியப் பறவை, தேசிய மிருகம் என்றிருப்பதைப்போல தேசிய நூலாகத் திருக்குறளைக் கொண்டு வருவதற்கான முயற்சியாக, மத்திய அரசிற்கு நான்கு முறை கடிதம் வரைந்தும் அதற்கான முடிவு இன் னும் தெரியவில்லை.

முன்னதாக, தமிழ் வளர்ச்சி— பண்பாட்டுத்துறைச் செயலர். திரு. சா.பா. இளங்கோவன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத் துணைத்தலைவர் டாக்டர் சை.வே. சிட்டிபாபு மற்றும் உயர் அதிகாரிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழ் வளர்ச்சி இயக்குநர் டாக்டர் சி. செல்வராசு அவர்கள் நன்றி நவின்றார்.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
கரு. சண்முகசுந்தரம்



**திருவள்ளுவர் திருநாளையொட்டி, மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள், சென்னை - மெரினா கடற்கரையில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.**




# 1,175 பேருந்துகளுடன் டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகம் உதயம்

**சென்னையில்** 1,175 பஸ்களுடன், 'டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகம்' 18.1.94ல், உதயமானது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் புதிய போக்குவரத்துக் கழகத்தைத் தொடங்கி வைத்தார்.

சென்னையிலுள்ள பல்லவன் போக்குவரத்துக் கழகத்தை, இரண்டாகப் பிரித்து, புதிய போக்குவரத்துக் கழகத்துக்கு அம்பேத்கர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பூந்தமல்லி நெடுஞ்சாலையை மையமாக வைத்து, வடக்குப் பகுதியில் அமைந்துள்ள, சென்னைப் பெருநகர்ப் பகுதிகளையும், எண்ணூர், மீஞ்சூர், செங்குன்றம், காரனோடை, பூவிருந்தவல்லி, ஆவடி மற்றும் திருநின்றவூர் போன்ற புறநகர்ப் பகுதிகளையும் உள்ளடக்கி, ''டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகம்' செயல்படும்.

**பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை**

பூவிருந்தவல்லி நெடுஞ்சாலைக்குத் தெற்குப் பகுதியில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் செயல்படும். இந்தப் போக்குவரத்துக் கழகத்தில் இதுவரை 2,349 பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தன. அவற்றில் 1,175 பஸ்கள் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகத்தில் இயங்கும்.

இதேபோலப் பணியாளர்களும் சரிசமமாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகக் கட்டுப்பாட்டில் பேசின் பாலம், தண்டையார்பேட்டை-1, தண்டையார் பேட்டை-2, திருவொற்றியூர், மாதவரம், பெரம்பூர், அயன்புரம், அண்ணாநகர், அம்பத்தூர், ஆவடி, பூந்தமல்லி-2 ஆகிய பஸ் டெப்போக்கள் இயங்கும்.

போக்குவரத்துக் கழகத்தின் தொடக்க விழா 18.1.94 அன்று காலை நடைபெற்றது. அயன்புரம், பஸ் நிலையம் அருகேயுள்ள பஸ் டெப்போவில், இதற்கான விழா நடைபெற்றது.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் புதிய போக்குவரத்துக் கழகத்தைத் தொடங்கி வைத்து, அய்யப்பன் தாங்கலில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பணிமனையையும் திறந்து வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

''பெரியார் கண்ட கனவுகளை நனவாக்கும் எண்ணத்தில் செயல்பட்டு வரும் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், இப்போது அம்பேத்கர் பெயரில் புதிதாகப் போக்குவரத்துக் கழகத்தை உருவாக்கியுள்ளார்.

## பழங்குடியினர் சிறுபாசன வசதி மேம்பாட்டிற்காக ரூ.21 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தடுப்பு அணைகள்

பழங்குடியினர் மேம்பாட்டிற்காக தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவற்றில் பழங்குடியினர் முன்னேற்றத் துணைத் திட்டமும் அடங்கும். இத்திட்டத்தின் கீழ் 1993-ஆம் ஆண்டில் பழங்குடியினர் சிறுபாசன வசதி மேம்பாட்டிற்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஜவ்வாது மலை, கல்வராயன் மலை மற்றும் பச்சை மலை ஆகிய மலைப்பகுதிகளில் ஓடைகள் குறுக்கே ஐந்து தடுப்பு அணைகள் (Check Dams) கட்ட ரூ.21 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்.

இந்த நிதியைக் கொண்டு ஜவ்வாது மலைப் பகுதியில் பாளைமருதூர் (வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்) மற்றும் மஞ்சக்கோட்டை (திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்) ஆகிய இரண்டு இடங்களில் 2 தடுப்பு அணைகளும், விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் மாவட்டம், கல்வராயன் மலைப் பகுதியில் திரூர் கிராமம் முள்ளங்கால் ஓடை மற்றும் கல்லிக்குப்பம் பெரிய ஓடை ஆகிய இரண்டு இடங்களிலும் 2 தடுப்பு அணைகளும், திருச்சி மாவட்டம் பச்சைமலைப் பகுதியில் புதூர் கிராமம் ஓடை அருகே ஒரு தடுப்பு அணையும் ஆக 5 தடுப்பு அணைகள் இந்த ஆண்டே கட்டி முடிக்கப்படும். இதனால், இந்தப் பகுதியில் வசிக்கும் பழங்குடியைச் சேர்ந்த விவசாயிகளுக்குக் கூடுதலாகப் பாசன வசதி கிடைக்கும்.

''சென்னையில் காலை, மாலை அலுவலக நேரங்களில் கூடுதல் பஸ்களை இயக்க வேண்டுமென்று முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கூறியுள்ளார்கள். அதன்படி இரண்டு போக்குவரத்துக் கழகங்களையும் சேர்த்து இன்னும் 6 மாதத்தில் கூடுதலாக 100 பஸ்கள் இயக்கப்படும்.

''பல்லவன் போக்குவரத்துக் கழகம் பிரிக்கப்படுவது சரிதானா? பஸ்களை இயக்க முடியுமா? என்றெல்லாம் கேட்டனர். இன்று உருவாக்கியுள்ள அம்பேத்கர் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும்.

அனைத்துப் பஸ்களையும் நவீனப் படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. ஒன்றன்பின் ஒன்றாகப் பஸ்கள் அழகுபடுத்தப்படும்.

### துரித இரயில்

''சென்னையில் துரித இரயில் திட்டத்தை நிறைவேற்றக் கூடுதல் நிதியை, மத்திய அரசு ஒதுக்கித் தர, இங்கு பேசிய எம்.பி., அன்பரசு அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு கிலோ மீட்டர் தூர இடைவெளியில் மின்சார இரயில் நிலையங்கள் இருந்தால் பஸ்களில் கூட்ட நெரிசல் குறையும்.

''எனவே, இதற்கான முயற்சியையும் அன்பரசு மேற்கொள்ள வேண்டும்''.

### அமைச்சர்கள்

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு மதுசூதனன் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு ஆனந்தன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் திரு டி. ஜெயக்குமார் ஆகியோர் பேசினார்கள்.

இந்த விழாவில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு அன்பரசு, புரசைவாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு ரங்கநாதன், சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு ஜீனத் சர்புதீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மற்றும் அண்ணா தொழிற் சங்கப் பொதுச் செயலாளர் திரு எஸ். முத்துமணி, எம்.பி., குடியரசுக் கட்சி எம்.எல்.ஏ., தமிழரசன், பெரம்பூர் எம்.எல்.ஏ. சேகர், போக்குவரத்துத்துறைச் செயலாளர் திரு. நாகராஜன், பல்லவன் போக்குவரத்துக் கழகத் தலைவர் திரு எப்.சி. சர்மா ஆகியோர் பேசினார்கள்.

### புதிய பணிமனைகள்

முன்னதாகப் பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் திரு ஜெயராஜ் வரவேற்றுப் பேசினார்.

அவர் பேசுகையில், ''அய்யப்பன் தாங்கலில் தொடங்கப்பட்டுள்ள பணிமனை போல ஆவந்தூர், எண்ணூர், மகாகவி பாரதி நகர், கண்ணதாசன் நகர், முகப்பேர் பகுதிகளில் புதிய பணிமனைகளும், பஸ் நிலையங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன'' என்று கூறினார்.

முடிவில் அம்பேத்கர் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் திரு கங்காதரன் நன்றி கூறினார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

பதிவு எண். M 8676
Licence No. TN/MS(C)/PP-23







